**தென் மாகாண சபை - 2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென் மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியாக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) தென் மாகாண சபை நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 19,342,530 தொகையான அடகு பிணை வைப்பு வட்டி வருமானத்தை ஆண்டிற்கான வருமானமாக கணக்குவைத்தல் மற்றும் | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானமும் செலவுகளும் சரியாக அடையாளங் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண சபையின் 03 நிறுவனங்கள் தொடர்பாக ஆண்டிற்கான செலவுகள் ரூபா 15,313,217 தொகையால் குறைத்து காட்டியதன் காரணமாக ரூபா 34,655,747 குறைத்து ஆண்டிற்கான பற்றாக்குறை காட்டப்பட்டிருந்தது. | | |
| (ii) | தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மிகை நிதியத்திற்காக 1991 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரையும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தில் காணப்பட்ட மொத்தமாக ரூபா 262,443,441 ஆன முழுச் சொத்துக்களும் மீளாய்வாண்டில் மாகாண நிதியத்தின் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | மீதிகளின் உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வது தொடர்பான தொடக்க நடவடிக்கை தற்பொழுது இடம்பெறுவதுடன் மீதிகளின் உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொண்ட உடன் இறுதிக் கணக்கினை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டில் மீள்மதிப்புச் செய்யப்பட்ட தென் மாகாண கடற்றொழில் அமைச்சின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,610,734 குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை மற்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழேயுள்ள பெலியத்த மருந்து உற்பத்தி நிலையத்தின் ரூபா 85,643,000 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மாகாண நிதியக் கணக்கின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 91,253,734 ஆலும் மற்றும் பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 2,375,355 ஆலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்க ளின் பெறுமதியும் பெறுமானத் தேய்வுச் செலவும் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் 08 நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 70,996,540 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை மற்றும் தென் மாகாண உள்ளுராட்சி திணைக்களத்தின் சோலார் பெனலின் பெறுமதி ரூபா 604,727 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமையின் காரணமாக மாகாண நிதிய கணக்கின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 70,391,813 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாண சபையின் கல்வித் திணைக்களம் மற்றும் முதலமைச்சின் அமைச்சின் ரூபா 61,757,745 மொத்த தொகையான 25 வாகனங்கள் மற்றும் 24 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி உரிய தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண நிதியக் கணக்கின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அதற்குச் சமமான பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் முழுக் காணிகள் மற்றும் ஆதனங்களின் பெறுமதி ரூபா 20,158,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 07 | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி அம்பலாந்தோட்ட பிரதேச செயலகத்திடமிருந்து தென் மாகாண முதலமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 28 ஏக்கர் 01 ரூட் 29 பேச்சர்ஸ் பரப்பளவான படஅத - தெற்கு சமோதான பண்ணை செயற்திட்ட காணியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால் மாகாண நிதிய கணக்கில் காணியின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (vii) | தென் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் 02 கணனி மென்பொருள் முறைமைகளின் பெறுமதி ரூபா 2,335,000 குறைத்தும் முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் தென் மாகாண சபையின் 02 நிறுவனங்களின் ரூபா 15,701,915 மொத்த தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த தொழிற்சாலைகளின் பெறுமதியும் தென் மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்குரிய ரூபா 12,883,500 ஆன நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படாமையால் மாகாண நிதிய கணக்கின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த பெறுமதியானது ரூபா 30,920,415 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குளைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கி வெளியிடப்பட்ட 2024 சனவரி 01 ஆந் திகதிய 03/2023 ஆம் இலக்க பிரதம செயலாளரின் (கணக்குகள் மற்றும் கொடுப்பனவுகள்) சுற்றறிக்கையின் 8.2 ஆம் | உரிய மதிப்பீட்டினை மேற்கொண்டு 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியை சரியாக அடையாளங் கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பந்திக்கு இணங்க மீளாய்வாண்டின் இறுதியளவில் தமது நிறுவனத்தின் அனைத்து நிதியற்ற சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் தென் மாகாண சபையின் 04 நிறுவனங்களின் 29 நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையால் மாகாண நிதியத்தின் கணக்கில் அச்சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ix) | தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது நடுவர் கட்டண பெறுவனவுகளுக்குரிய மாகாண சபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த ரூபா 26,708,965 பணம் 03 மாவட்ட அலுவலகங்களின் மூலம் பேணப்பட்டு வருகின்ற 03 பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்திவைத்து அவற்றில் ரூபா 1,319,290 தொகை மாத்திரம் மாகாண சபை வருமானத்திற்கு செலவு வைத்து மிகுதிப் பணமான ரூபா 25,716,897 தொகை மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது செலவு செய்யப்பட்டிருந்தும் அக்கொடுக்கல் வாங்கல் மாகாண சபை நிதியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து நடுவர் கட்டண பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தும் வகையில் கணக்கீடு செய்வதற்காக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | அனைத்து வருமானங்களையும் மாகாண நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

#### தென் மாகாண சபை நிதியம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் முறையே ரூபா 681,794,411 மற்றும் ரூபா 11,201,340 ஆக இருந்ததுடன் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களினால் மீளாய்வாண்டில் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 1,649,058,200 மற்றும் ரூபா 81,548,318 ஆக இருந்ததனால் மொத்தமாக ரூபா 1,037,610,767 வித்தியாசம் காணப்பட்டது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்துவதற்கு மிகுதியான முத்திரை கட்டணம் ரூபா 681,794,410 மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 11,201,339 ஆகும். அதற்கிணங்க உரிய பெறுமதிகள் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்படாது மாகாண வருமான ஆணையாளரினால் சிபாரிசு செய்யப்படுகின்ற பணம் அந்த நிறுவனங்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும் அந்த நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்காக காணிப் பதிவாளர் அலுவலகத்தின் மூலம் அனுப்பப்படும் ஆவணங்களில் குறிப்பிட்ட பணம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஆண்டின் தொடக்கத்தில் கணக்குகளைத் தயாரிக்கும் போது உள்ளூராட்சி நிறுவனங்களினால் ஆண்டிற்காக கிடைக்க வேண்டியதாகக் கருதி மதிப்பீடு செய்யப்பட்ட தொகை அக்கணக்குகளுக்கு சேர்க்கப்பட்டுள்ளது. அந்த விடயம் இந்த வித்தியாசத்திற்கு காரணம் எனவும் மாகாண திறைசேரியினால் அனுப்பப்பட்ட மீதிகளை அக்கணக்குகளுக்கு | மீதிகளை ஒப்பீடு செய்வதற்கு உட்படுத்தி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளடக்குமாறும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**தென் மாகாண சபை நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தென் மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2018 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 16,778,168 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மாகாண நிதியத்தின் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததா என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து அச்செலவுகள் மூலதனமாக்கப்படவில்லை. 2024 நிதிக்கூற்றுக்களில் உரிய கைவிடுதல் தவறு சரி செய்யப்படும். | போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண ஆளுனர் உள்ளடங்கலாக ஒவ்வொரு நிறுவனத்தினதும் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 300 – தென் மாகாண ஆளுநர் செயலகம்

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லைகள் மற்றும் எரிபொருள் வகைகள் தொடர்பாக மாகாண சபை பிரதம செயலாளர் தெரியப்படுத்தியிருந்தும் மற்றும் அது தொடர்பாக வழங்கப்பட்ட சிபாரிசுகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாதும் அரசாங்க செலவுகளை முகாமைத்தவம் செய்வது தொடர்பான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி ஆளுநரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆம் இலக்க கடித்தின் மூலம் பெற்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம செயலாளர் சுற்றறிக்கை (நிதி) வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க தென் மாகாண ஆளுநர் செயலகத்தில் ஒரு பதவியினைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தருக்கு 2019 மே மாதத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 295,280 | எரிபொருள் படியை செலுத்தும் போது உத்தியோகத்தர் தொகுதிகள் வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருள் வழங்கப்படாததுடன் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக பயன்படுத்துகின்ற எரிபொருள் வகைகளுக்கு இணங்க இரண்டு வகைகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உண்மையான எரிபொருள் வகையை அடிப்படையாகக் கொண்டு படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகரித்த எல்லையினை மிகைத்திருந்ததன் காரணமாகவும் மற்றும் சுப்பர் பெட்ரோல் / சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் காரணமாகவும் ரூபா 56,100 எரிபொருள் படியாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | அரசாங்க நிருவாக அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் எரிபொருள் நுகர்வினை பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை பரீட்சித்தல் மேற்கொள்ளும் போது எரிபொருள் தாங்கி முழுமையாக நிரப்பப்பட்டு எரிபொருளை பரீட்சித்ததன் பின்னர் நுகர்வு செய்யப்பட்ட எரிபொருளின் அளவினை மீண்டும் நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் ஆளுநர் செயலகத்தில் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகமையுள்ள மற்றும் அதற்காக மாதாந்த எரிபொருள் படி கிடைக்கின்ற உத்தியோகத்தர்களின் 08 உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிப்பதற்காக ரூபா 163,402 மேலதிக எரிபொருள் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேலதிக எரிபொருள் செலவாக ரூபா 163,402 பணத்தை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அந்த உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தியுள்ளதுடன் அப்பணத்தை அறவீடு செய்ததன் பின்னர் கணக்காய்விற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2019 மே 02 ஆந் திகதிய மற்றும் 2020 சனவரி 15 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க 2019 யூன் 25 ஆந் திகதியிலிருந்து ஆளுநரின் ஆலோசகருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 75,000 மாதாந்த படியும் வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் பதவிக்குரிய வசதிகள் மற்றும் உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆளுநர் அலோசகராக இந்த உத்தியோகத்தருக்கு 2019 யூன் 25 ஆந் திகதியிலிருந்து 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை எரிபொருள் படியாக மொத்தமாக ரூபா 3,203,409 செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ ஆளுநருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் G/SP/Legal/108 ஆம் இலக்க 2020 மார்ச் 18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உரிய உத்தியோகத்தர் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். உரிய பதவிக்கு தகமையுள்ள படிகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ஏ) ஆளுநரின் ஆலோசகராக சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது 2020 மார்ச் 18 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் இந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2020 மார்ச் 19 ஆந் திகதியிலிருந்து வேலையை பொறுபேற்று அத்திகதியிலிருந்து 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை ரூபா 1,166,838 படியினை பெற்றுக்கொண்டிருந்தார். | 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ ஆளுநருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் G/SP/Legal/108 ஆம் இலக்க மற்றும் 2020 மார்ச் 18 ஆந் திகதிய கடித்தின் மூலம் உரிய உத்தியோகத்தர் தென் மாகாண அரசாங்க ஆணைக்குழுவின் அங்கத்தவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். உரிய பதவிக்கு தகமையுள்ள படிகளும் ஏனைய கொடுப்பனவுகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (பீ) | மேலும் ஆளுநரின் ஆலோசகர் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராக செயற்பட்டுக்கொண்டிருக்கையில் காலி மரபுரிமை மன்றத்தின் ஒரு பணிப்பாளராகவும் 2020 யூலை 22 ஆந் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வேலையை பொறுப்பேற்று அதற்காக அத்திகதியிலிருந்து 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை ரூபா 2,354,639 படியினையும் பெற்றுக்கொண்டிருந்தார். | காலி மரபுரிமை மன்றம் என்பது கௌரவ ஆணையாளரின் கீழ் அல்லது தென் மாகாண சபையின் கீழுள்ள ஒரு நிறுவனம் அல்ல. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (சீ) | ஆளுநரின் ஆலோசகரினால் உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்தி எரிபொருள் படி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தை அவரின் வீட்டில் நிறுத்திவைப்பதற்கும் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டிருந்தும் காலி மரபுரிமை மன்றத்திற்குரிய காரினையும் பயன்படுத்தி 2,450 கிலோ மீற்றர் ஓடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஆளுநரின் செயலாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட வாகனத்திற்காக 2022 யூலை மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை காலி மரபுரிமை மன்றத்திடமிருந்தும் 410 லீற்றருக்காக ரூபா 142,280 தொகையான | காலி மரபுரிமை மன்றமானது ஒரு மாகாண சபை நிறுவனமோ அல்லது கௌரவ ஆளுநரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற ஒரு நிறுவனமோ அல்ல என தயவாக தெரிவிக்கிறேன். உரிய நிறுவனத்தின் பிரமாணம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அந்த நிறுவனம் செயற்படுகின்றது எனவும் உரிய பரீட்சித்தல் அந்த நிறுவனத்தின் ஒரு பொறுப்பு எனவும் தெரிவிக்கிறேன். | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எரிபொருளை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் காலி மரபுரிமை மன்றத்தில் முழு நேரமாக பணிப்பாளர் பதவியில் கடமையை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ட) | அதற்கிணங்க 2020 திசெம்பர் வரை மூன்று நிறுவனங்களிடமிருந்தும் சம்பளமும் படிகளும் 2021 சனவரியிலிருந்து இன்றுவரை ஆளுநர் செயலகத்திலிருந்து ஆலோசகர் தபவிக்கான எரிபொருள் படியுடன் உத்தியோகபூர்வ வாகனமும் காலி மரபுரிமை மன்றத்திடமிருந்து சம்பளமும் படியும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து படிகளும் பெற்றுக்கொண்டிருந்தார். | ஆளுநரின் ஆலோசகர் பதவிக்காக 2020 ஆகஸ்ட் வரை மாத்திரமே படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2020 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2021 திசெம்பர் மாதம் வரை 140 லீற்றர்களும் 2022 சனவரி மாதத்திலிருந்து 135 லீற்றர்களும் ஆளுநரின் ஆலோசகர் பதவியில் கடமையாற்றியமைக்கான எரிபொருள் படி மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆளுநரின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஆளுநரின் ஆலோசகர் பதவியில் கடமையாற்றியமைக்காக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் காலி மரபுரிமை மன்றத்திற்கான படியும் ஏனைய கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுவது இந்த அலுவலகத்தினால் அல்ல | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(iii)** | **ஆளுநரின் செயலகதத்தின் உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பான பரீட்சிப்பு** | | |
| (ஏ) | சனாதிபதியின் செயலாளரின் 2018 ஒக்தோபர் 12 ஆந் | சனாதிபதியின் செயலாளரினால் அரசாங்க செலவுகளை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திகதிய PC/CSA/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவு மற்றும் 2021 திசெம்பர் 29 ஆந் திகதிய 13/2008(VI) ஆம் இலகக திருத்திய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த எரிபொருள் படி செலுத்தலாம் என காட்டப்பபடடிருந்தும் தென் மாகாண ஆளுநரின் செயலகத்தில் பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு இணைத்துக்கொள்ளப்ப ட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனத்திற்கு பதிலாக ஆளுநரின் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது ஆளுநரின் பாதுகாப்பு வாகனம் 2023 சனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதிக்குள் கடமைச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தும் பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு இணைத்துக்கொள்ளப்ப ட்ட வாகனத்திற்கு ஒரு மாதத்திற்கு 213 லீற்றர் வீதம் 1704 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 601,512 எரிபொருள் படியாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ஆளுநருக்கும் ஆளுநரின் பாதுகாப்பு வாகனத்திற்குமாக முகாமைத்துவம் செய்வதன் கீழ் வழங்கப்பட்ட சனாதிபதியின் கீழ் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பயன்படுத்துகின்ற உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மாதாந்தம் எரிபொருள் படியாக செலுத்தப்பட்டது. அவ்வாறே கௌரவ ஆளுநருக்கும் அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஆளுநர் பாதுகாப்பு வாகனங்களுக்காகவும் சுற்றறிக்கையில் குறிப்பிட்ட எரிபொருள் லீற்றர் அளவிற்காக மாதாந்த எரிபொருள் படி செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | அக்காலப்பகுதிக்காக ஒரு மாதத்திற்கு 495 லீற்றர் வீதம் 3,960 லீற்றர்களுக்காக ரூபா 1,397,880 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (பீ) | அவ்வாறே பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் 2023 சனவரி மாதத்திலிருந்து 2023 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தில் வெளிக்கள கடமைச் செயற்பாடுகளுக்காக பயணம் செய்த 119 நாட்களில் 118 நாட்களுக்காக சொந்த பதவிக்கு ஒதுக்கிய வாகனம் பயன்படுத்தப்படாதிருந்த துடன் ஓடுவதற்காக ஆளுநரின் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது ஆளுநரின் பாதுகாப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு வாகம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் கௌரவ ஆளுநரின் கடமைச் செயற்பாட்டிற்காக வெளியே செல்லும் சந்தர்ப்பத்தின் போது கௌரவ ஆளுநரின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் கடமைச் செயற்பாட்டு வசதிகளுக்காகவும் பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஆளுநரின் உத்தியோகபூர்வ வாகனத்தில் அல்லது பாதுகாப்பு வாகனத்தில் பயணம் செய்தல் சில சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளது. பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரால் ஒரு வாகனத்திற்காக மாத்திரம் பயணச் செலவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | அடுத்துவரும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நிறைவேற்றிய நிகழ்ச்சித்திட்டங்களையும் சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு நாட்களிலும் நிறைவேற்றப்பட்ட வேலைகளை தெளிவாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | ஆளுநர் வாகன அணியாகக் காணப்பட்ட ஒரு ஜீப் வண்டிக்காக 13/2008 ஆம் இலக்க 2008 யூன் 26 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இற்கு இணங்க 2022 சனவரி மாதத்திற்காக மாத்திரம் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மாத இறுதியில் மைலோ | கெப் வாகனத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட ஒரு சாரதி இல்லாததுடன் ஆளுநரின் உத்தியோகபூர்வ வாகனம் உள்ளடங்கலாக 03 பாதகாப்பு வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு | நி.பி 1645 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீற்றரின் அளவு 598296 ஆக இருந்ததுடன் 2023 செப்தெம்பர் 19 ஆந் திகதி எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் மைலோ மீற்றரின் அளவு 602460 ஆக இருந்ததானால் அக்காலப்பகுதிக்குள் ஓடியிருந்த கிலோ மீற்றரின் அளவு 4164 ஆக இருந்த போதிலும் அதற்காக ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனத்தை உள்ளடக்கி 04 வாகனங்களுக்காக இரண்டு சாரதிகள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்பொழுது இருக்கின்ற இரண்டு சாரதிகள் 04 வாகனங்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். எனவே கெப் வாகனம் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அந்த வாகனத்திற்காக ஓட்ட அட்டவணையை பெற்றுக்கொள்ளும் போது சிக்கல் நிலை உருவாகியுள்ளது. மற்றும் எதிர்காலத்தில் இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (v) | தற்பொழுது 06 அங்கத்தவர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கியுள்ள தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தற்போதைய தலைவரின் வயது 78 வருடங்களையும் ஒரு அங்கத்தவரின் வயது 54 வருடங்களையும் ஏனைய அங்கத்தவர்களின் வயது 65 வருடங்களுக்கும் 77 வருடங்களுக்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் அவர்களின் சேவைக்காலம் 03 ஆண்டுகளிலிருந்து 29 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டது. மேலும் வயது 77 ஆண்டுகள் மற்றும் 78 ஆண்டுகளான இரண்டு அங்கத்தவர்கள் 1994 ஆம் ஆண்டில் மற்றும் 1997 ஆம் ஆண்டிலிருந்து ஆணைக்குழுவின் | தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கத்தவர்கள் இதுவரை தென் மாகாண சபையில் சேவையாற்றிய பல்வேறு ஆளுநர்களினால் அவர்களின் ஒவ்வொரு பதிவிக்காலத்தின் போது நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களாகும். சிலர் அங்கத்தவர்களை புதிதாக நியமிப்பதற்காக அதே போல மேலே காட்டப்பட்டுள்ள ஏற்பாட்டின் கீழ் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டிருந்த நபரினை மீண்டும் நியமிப்பதற்கு மாகாண ஆளுநருக்கு காணப்படுகின்ற அதிகாரம் எந்த சட்டத்தினாலும் மட்டுப்படுத்தப்படவில்லை. | ஆணைக்குழு அங்கத்தவர்களாக தகமை மற்றும் சில வயது எல்லைக்கு உட்பட்டு அங்கத்தவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அங்கத்தவர்களாக தொடர்ச்சியாக மீள நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சேவைக்காலம் முறையே 29 ஆண்டுகள் மற்றும் 26 ஆண்டுகளாகக் காணப்பட்டன. இதற்கிணங்க ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஆளுநரினால் நியமிக்கப்படும் போது வயது எல்லை குறிப்பிடப்படாதிருந்த போதிலும் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது காலத்திற்கு பொருத்தமாகவும் வினைதிறனாகவும் தீர்மானங்களை எடுப்பதற்கு மிகவும் பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமித்தல் மிகவும் பொருத்தமானது என அவதானிக்கப்பட்டதுடன் அங்கத்தவர்கள் தொடச்சியான நீண்டகால சேவையின் மூலம் தனிப்பட்ட ஆதிக்கத்தினை கட்டியெழுப்புதல் இடம்பெறுகின்றது எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது.

அது மாகாண ஆளுநரின் தற்றுணிபின் பிரகாரம் நிறைவேற்றப்படுகின்ற ஒரு செயற்பாடாகும்.

**1.5.2 தலைப்பு 301 – தென் மாகாண சபை செயலகம்**

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் அங்கீகரித்த எரிபொருள் எல்லை மற்றும் எரிபொருள் வகை தொடர்பாக மாகாண சபை பிரதம செயலாளருக்கு தெரியப்படுத்தியிருந்தும் மற்றும் அது தொடர்பாக வழங்கியிருந்த சிபாரிசுகளை கருத்தில் கொள்ளாதும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தேசிய கொள்கைகள் சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி ஆணையாளரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம செயலாளர் சுற்றிக்கை (நிதி) வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க தென் மாகாண சபை செயலகத்தின் ஒரு பதவிக்குரிய இரண்டு உத்தியோகத்தர்களுக் | எரிபொருள் படியினைச் செலுத்தும் போது உத்தியோகத்தர் தொகுதி வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருள் படி செலுத்தப்படாததுடன் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக அந்த வாகனங்களுக்கு பயன்படுத்துகின்ற எரிபொருள் வகையின் பிரகாரம் இரண்டு வகைகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உள்ளபடியான எரிபொருள் வகையை அடிப்படையாகக் கொண்டு படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றகறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கு 2019 மே மாதத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 950,733 அங்கீகரித்த எல்லையை மிகைத்ததன் காரணமாகவும் சுப்பர் பெற்றோல்/ சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் காரணமாகவும் ரூபா 324,145 எரிபொருள் படியாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2010 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய தென் மாகாண ஆளுநரின் செயலாளரின் G/SP/1/57 அலகு 01 ஆம் இலக்க கடிதம் | தொடர்புபட்ட கடிதத்திற்கு இணக்கமற்ற வகையில் 2020 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரையான காலம் தொடர்பாக தென் மாகாண சபையின் தலைவருக்கு ஒரு வீட்டினை வாடகைக்கு எடுப்பதற்காக ரூபா 1,350,000 தொகையான படி சபை செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பீஎஸ்/சீ/எஸ்ஏ/11-18(1) மற்றும் பீஎஸ்/சீ/எஸ்ஏ/11-18(11) ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க 2022 ஒக்தோபர் மாதத்திலிருந்து இப்படி செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(iii)** **சனாதிபதி செயலாளர் சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய PS/CSA/ 11-18 ஆம் இலக்க சுற்றறிக் கையின் 1 ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபை கலைத்ததன் பின்னர் அலுவலக படி செலுத்த முடியாத போதிலும் தென்மாகாண சபையின் தலைவருக்கு 2019 ஒக்தோபர் மாதத்திலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரை சபை செயலகத்தினால் அலுவலக படியாக ரூபா 1,850,000 செலுத்தப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலாளரின் 2018 ஒக்தோபர் மாதம் 12 ஆந் திகதிய பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலக படி சம்பந்தமாக எந்த குறிப்பும் காட்டப்பட்டிருக்காத துடன் அந்த சுற்றறிக்கையில் உள்ளடகக்கப்படா | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | த ஏனைய படி செலுத்துவதிலிருந்து தவிர்த்து கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என மற்றும் CSS/7/1/2 ஆம் இலக்க 2019 மே 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பெற்ற அங்கீகாரத்தின் பிரகாரம் இப்படி வழங்கப்பட்டுள்ளது அவ்வாறே 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க 2022 ஒக்தோபர் மாதத்திலிருந்து இப்படியினை செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (பீ) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய PS/CSA/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் தலைவருக்கு ஒரு பெற்றோல் வாகனத்திற்காக 600 லீற்றரும் ஒரு டீசல் வாகனத்திற்கு 500 லீற்றரும் வழங்கப்படலாம் என தெரியப்படுத்தியிருந்தும் மேற்கூறிய ஒழுங்குவிதிகளை மீறி தென் மாகாண ஆளுநரின் G/SP/1/2/1/3/19 ஆம் இலக்க 2019 யூலை 09 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 600 லீற்றர் டீசல் வீதம் பெற்றுக்கொண்டதனால் 2019 யூலை மாதத்திலிருந்து 2022 செப்தெம்பர் மாதம் வரை சுற்றறிக்கைக்கு | ஆளுநரின் ஏ/எஸ்பீ/1/2/1/3/19 ஆம் இலக்க 2019 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கௌரவ தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக ஒரு வாகனத்திற்கு 600 லீற்றர் டீசல் வீதம் 2019 ஏப்ரல் மாதத்திலிருந்து எரிபொருள் படியினை வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் இந்த அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இணக்கமற்ற வகையில் 3,900 லீற்றர் டீசலுக்காக ரூபா 708,000 தொகை சபை செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணக்கமற்றதாக சுப்பர் டீசல் விலையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்ததனால் ரூபா 682,525 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | தொடர்பான சுற்றறிக்கைக்கு இணங்க எரிபொருள் படியினை செலுத்தும் போது வழங்க வேண்டிய எரிபொருள் வகை என்ன என்பது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்படவில்லை. 2014/1 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் சாதாரண எரிபொருள் விலைக்கு இணங்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படி செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் அந்த அறிவுறுத்தல் செல்லுபடியாவது 2014-2016 காலத்திற்கு மாத்திரமாகும். | |
| (சீ) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய PS/CSA/ 11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கைக்கு முரணாக தென் மாகாண சபையின் தலைவரின் ஒருங்கிணைப்பு மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல் செயலாளருக்கு 2019 ஒக்தோபர் மாதத்திலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரை ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 வீதம் ரூபா 3,700,000 தொகையான வாகன படியும் உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படாதிருந்தும் | சனாதிபதி செயலாளரின் பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ மாகாண சபை தலைவரின் உதவி ஆளணியினர் இலக்கம் 1, 2 மற்றும் 4 என்ற உத்தியோகத்தர்கள் அதாவது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2019 ஆகஸ்டிலிருந்து 2022 ஒக்தோபர் வரை ரூபா 2,516,680 எரிபொருள் படி சபை செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | முறையே தனிப்பட்ட செயலாளர், ஒருங்கிணைப்பு செயலாளர், பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர், ஒரு உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகமை பெறுவார்கள். எனினும் அவர்களுக்கு வழங்குவதற்கு அப்போது வரை அலுவலகத்திடம் மேலதிக வாகனங்கள் இல்லாததனால் வாகனப் படியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 (I) மற்றும் பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 (II) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2022 ஒக்தோபர் மாதத்திலிருந்து இப்படியினைச் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (ட) | 2022 செப்தெம்பர் 27 ஆந் திகதிய PS/CSA/ 11-18 (1) மற்றும் 2022 | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் தலைவருக்கு செலுத்தக்கூடிய படிகள் தொடர்பாக தெளிவாகக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு இணக்கமற்று சபை செயலாளரினால் | 2011 ஏப்ரல் 27 ஆந் திகதிய 566 ஆவது அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க வருடாந்த மருத:துவ காப்புறுதித் திட்டம் வெற்றிகரமாக கௌரவ | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒக்தோபர் 28 ஆந் திகதிய PS/SCA/11-18(11) ஆம் இலக்க அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் மாகாண சபை சுற்றறிக்கை | 2023 மார்ச் 30 ஆந் திகதி விடுவிக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் அதற்காக தென் மாகாண கௌரவ ஆளுநர் 2023 ஏப்ரல் 06 ஆந் திகதி வழங்கிய அங்கீகாரத்தின் அடிப்படையில் தென் மாகாண சபையின் தலைவருக்கு மருத்துவ காப்புறுதியினை வழங்குவதற்கு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 104,818 பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2011 ஏப்ரல் 27 ஆந் திகதி நடைபெற்ற 566 ஆவது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அப்போது காணப்பட்ட அமைச்சரவையின் மூலம் இதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட நிதிப் பிரச்சினையை முன்னிட்டு சனாதிபதியின் செயலாளரினால் மாகாண சபைகளின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான சுற்றறிக்கையின் மூலம் செலவுகளை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுக்களுக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி ஏழாவது மாகாண சபை, கலைக்கப்பட்டதன் பின்னர் மருத்துவ காப்புறுதித் திட்டமும் இரத்துச் செய்யப்பட்டது. எனினும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறு கலைக்கப்பட்டதன் பின்னரும் மாகாண சபையின் கௌரவ தலைவர் தனது பதவியை காலி செய்யாது பேணிவருவதனால் மருத்துவ காப்புறுதித் திட்டம் தொடர்ச்சியாக அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2019 ஏப்ரல் 10 ஆந் திகதியிலிருந்து தென் மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளதனால் உறுப்பினர்களின் பதவியும் இரத்துச் செய்யப்பட்டிருந்தும் சபையின் ஒரு உறுப்பினருக்கு 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வழங்கப்பட்ட துவக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மீண்டும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உறுப்பினரினால் துவக்கு களவு போயுள்ளது என ஹிக்கடுவ பொலிசில் மேற்கொண்ட முறைப்பாட்டிற்குரிய முறைப்பாட்டு பற்றுச்சீட்டின் பிரதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பின்தொடர் நடவடிக்கையானது முறைப்படியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | அமைச்சருக்கும் உறுப்பினர்களுக்கும் ரூபா 10,484,810 செலவு செய்து 51 லெப்டொப் இயந்திரங்களும் 54 டெப் இயந்திரங்களும் ஒரு கணனியும் 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதியிலிருந்து மாகாண சபை கலைக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவை மீண்டும் சபைச் செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்காத போதிலும் இன்று வரை அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நடவடிக்கைகளுக்காக பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மீண்டும் மாகாண சபை தோற்றுவிக்கப்படும் வரை இது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | உரிய லெப்டொப் மற்றும் கணனி இயந்திரங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 302 – தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிகையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3(ii) ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லை மற்றும் எரிபொருள் வகை தொடர்பாக மாகாண பிரதம செயலாளருக்குத் தெரியப்படுத்தியிருந்தும் மற்றும் அது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சிபாரிசுகளை கருத்தில் கொள்ளாது மற்றும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தேசிய கொள்கைகள் சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி ஆளுநரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பெற்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம் செயலாளர் சுற்றிக்கை (நிதி) வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்க தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒரு பதவிக்குரிய ஒரு | எரிபொருள் படியினை செலுத்தும் போது உத்தியோகத்தர்கள் தொகுதி வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருட்கள் செலுத்தப்படாததுடன் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக பயன்படுத்தும் எரிபொருள் வகைக்கு இணங்க இரண்டு வகைகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உண்மையான எரிபொருளின் அடிப்படையில் படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தருக்கு 2019 மே மாததத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,005,520 அங்கீகரித்த எல்லையினை மிகைத்ததன் காரணமாக மற்றும் சுப்பர் பெற்றோல்/ சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் காரணமாக ரூபா 340,540 எரிபொருள் படியாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள தென் மாகாண அரசாங்க சேவையின் 10 பதவிகள் தொடர்பான சேவை பிரமாணக் குறிப்புக்களுக்கு மத்தியில் 07 சேவை பிரமாணக் குறிப்புக்களுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் 10 சேவை பிரமாணக் குறிப்புக்களுக்காக தென் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தென் மாகாண அரசாங்க சேவைகளிலுள்ள எப்பதவிக்குமான சேவை பிரமாணக் குறிப்புக்குரிய வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்படலில்லை. | தென் மாகாண அரசாங்க சேவையின் சேவை பிரமாணக் குறிப்புக்கள் மத்திய அரசாங்கத்தின் சேவை பிரமாணக் குறிப்புக்களுக்கு நேரொத்ததாக தயாரிக்கப்படுகின்றன. மத்திய அரசாங்கத்தினால் இச்சேவை பிரமாணக் குறிப்பு மூன்று மொழிகளிலும் தயாரித்து வர்த்தமானியில் வெளியிடப்படுவதனால் மாகாண அரசாங்க சேவையின் மூலமும் அச்சேவை பிரமாணக் குறிப்பு மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்படும் தேவைப்பாடு இல்லை. | சேவை பிரமாணக் குறிப்பிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு 304 – தென் மாகாண முதலமைச்சு மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதாரமும் சுதேச மருத்துவமும், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவை அமைச்சு**

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | தென் மாகாண நிதி விதி 46.1 | தென் மாகாண முதலமைச்சின் 08 செலவு விடயங்களுக்காக நிதி ஏற்பாட்டு பணத்தை மிகைத்து ரூபா 2,701,831 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் நி.பி 46.1 இற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கும் அவ்வாறான நிலைமையை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதி விதி 259.2 மற்றும் தென் மாகாண பிரதம செயலாளரின் 2024 சனவரி 02 ஆந் திகதிய 03/2023 ஆம் இலக்க பிரதம செயலாளர் (கணக்குகள் மற்றும் கொடுப்பனவுகள்) சுற்றறிக்கை | தொடர்புபட்ட விதிகளின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் கணக்குகள் தீர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் திசெம்பர் மாதத்தின் 31 ஆந் திகதியளவில் மிகுதியாக உள்ள கட்டுநிதி மீதியானது அடுத்துவரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதிக்கு அல்லது மாகாண தீறைசேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற திகதிக்கு முன்னர் மாகாண திறைசேரிக்கு மீளச் செலுத்த வேண்டிய போதிலும் தென் மாகாண முதலமைச்சின் ரூபா 179,441 தொகையான கட்டுநிதி மீதி சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கை மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3(ii) ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லை மற்றும் எரிபொருள் வகை தொடர்பாக மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தும் மற்றும் அது தொடர்பாக வழங்கப்பட்ட சிபாரிசுகளை கவனத்தில் கொள்ளாது மற்றும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தேசிய கொள்கைகள் சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி ஆளுநரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம செயலாளர் (நிதி) சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க அதன் மாகாண முதலமைச்சின் 04 பதவிகளுக்குரிய 05 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 2,471,315 அங்கீகரித்த எல்லையை மிகைத்ததன் காரணமாக மற்றும் சுப்பர் பெற்றோல்/ சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் காரணமாக ரூபா 1,090,657 எரிபொருள் படியாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | எரிபொருள் படியினை செலுத்தும் போது உத்தியோகத்தர் தொகுதிகள் வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருள் செலுத்தப்படாததுடன் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக அந்த வாகனங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள் வகைக்கு இணங்க இரண்டு வகைகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உண்மையான எரிபொருள் வகையை அடிப்படையாகக் கொண்டு படிகள் செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட 2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01 ஆம் இலக்க வேலை வாய்ப்பு வருமானத்தில் லிருந்து முற்பண தனிப்பட்ட வருமான வரியை (மு.த.வ.வ) கழித்தல் சம்பந்தமாக சேவை வழங்குனருக்கான அறிவுறுத்தல் தொகுதியின் 02 ஆம் பந்தி | தொடர்புபட்ட அறிவுறுத்தல் தொகுதியின் பிரகாரம் வரி அறவீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு வெற்றி பெற வேண்டிய வேலை வாய்ப்பின் மூலமான பெறுவனவுகள் மற்றும் இலாபம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் முதலமைச்சின் இரண்டு உத்தியோகத்ரத்கள் 2023 சனவரி மாதத்திலிருந்து 2024 சனவரி 31 ஆந் திகதி வரையான காலத்தில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 982,000 தொகையான பெறுகை குழு படியானது உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டிற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 சனவரியிலிருந்து 2024 சனவரி 31 ஆந் திகதி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பெறுகை குழு படி ரூபா 982,000 ஆகும். அது உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் இதில் முன்னைய ஆண்டு தொடர்பான படியினை நிகழ்கால நிலைமைக்கு செம்மையாக்கி அறவீடு செய்வது சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து ஆலோசனையைப் பெற்று அதற்கிணங்க மேலதிக சம்பள கொடுப்பனவின் மூலம் உரிய வரிக் கணிப்பீட்டிற்காக இப்படிப் பணத்தை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட்டு கணக்காய்விற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு வருமான வரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் தொகுப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## (ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உறுப்பினர் பிரேரணைகளின் கீழ் தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையினால் சாரதி பயிற்சிகளை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து ரூபா 15,000,000 மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் பொதுக் கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,281,140 பணத்தில் ரூபா 5,000,000 ஆனது 2021 திசெம்பர் 23 ஆந் திகதி முதலமைச்சிற்கு திருப்பி அனுப்பியிருந்ததுடன் அப்பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டு 2023 பெப்ரவரி 09 ஆந் திகதி அரசாங்கத்தின் வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தலானது தென் மாகாண முதலமைச்சின் செயற்பாடுகளுக்கு மத்தியில் ஒரு பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் அச்செயற்பாடும் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இக்கணக்கில் காணப்பட்ட மீதி 2019/2020 ஆண்டுகளில் உறுப்பினர்களின் பிரேரணைக்கு இணங்க சாரதிப் பயிற்சி கற்கை நெறியை மேற்கொள்வதற்காக சாரதிப் பயிற்சி பாடசாலைக்கு கொடுப்பனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்போது காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையானது 03 ஆண்டுகள் காலம் காணப்பட்டதன் காரணமாக பயிற்சி கற்கை நெறிகள் நடைபெறாமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குதல் இடம்பெறாமையால் எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக செலவு செய்ய முடியாதிருந்தது. | ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி எதிர்பார்த்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## (இ) பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) மாகாண நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் - 2023 இன் கசவைகளுக்கு ஒருங்கிணைவாக சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக ரூபா 8,000,000 நிதி ஏற்பாடு | | |

| | | |
|---|---|---|
| ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி தென் மாகாணத்தில் முச்சக்கர வண்டிகள், பாடசாலை சேவை வாகனங்கள், அலுவலக சேவை வாகனங்கள் மற்றும் ஏனைய பயணிகள் சேவை வாகனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக இணையதளத்தை அடிப்படையாகக் கொண்டு இணைய வழிபடுத்திய அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் ஒரு உள்ளீட்டினை வடிவமைத்து தென் மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை வழங்குவதற்கு தேசிய போட்டி விலை மனுக் கோரல் முறைமையின் கீழ் விலைகளைக் கோருவதற்கு 2023 செப்தெம்பர் 26 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க மேற்கூறிய உள்ளீட்டினை வடிவமைத்து வழங்குவதற்காக 05 ஆண்டுகள் உத்தரவாத காலத்துடன் ரூபா 7,590,000 தொகைக்கு (பெறுமதி சேர் வரி இல்லாது) வழங்கி பொருத்துவதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு 2023 நவம்பர் 13 ஆந் திகதி அமைச்சு பெறுகை குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (ஏ) அமைச்சினால் உள்ளீட்டினை வடிவமைப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 379,500 | இப்பெறுகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறுத்துவதற்கான எதிர்பார்ப்பின் அடிப்படையில் செயலாற்றல் பிணை 2024 | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான இலங்கை வங்கி செயலாற்றல் பிணை 2024 சனவரி 28 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் 2024 பெப்ரவரி 16 ஆன கணக்காய்வுத் திகதி வரையும் உள்ளீடு வடிவமைக்கப்பட்டு ஒப்படைக்கப்படாதிருந்தும் செயலாற்றல் பிணை முறியின் காலத்தை நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சனவரி 28 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு இச்செயற்திட்டத்தில் 80 சதவீதம் அளவானவை முடிவடைந்துள்ளது என்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்ததனால் மிகுதி 20 சதவீதம் அளவானவை 2024 சனவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றது என எதிர்பார்க்கப்பட்டதனால் 2024 சனவரி 28 ஆந் திகதி வரையான செயலாற்றல் பிணையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (பீ) | ஒரு நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட விலை மனுக்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பிவைக்கும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுலவினால் இந்நிறுவனத்தின் கடந்த 05 ஆண்டு காலம் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களை எழுத்துமூல சான்றுடன் சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத்தியிருந்தது. எனினும் இக்கம்பனி கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்தில் 2023 | இந்நிறுவனம் நீண்டகாலமாக துறையில் செயற்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக 05 ஆண்டுகள் கால அனுபவத்துடனான ஆவணத்தை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு எழுத்துமூல லவிடத்தின் கீழ் உறுதிப்படுத்தியிருந்தது. அதன் தற்போதைய பெயரினை பதிவுசெய்தல் 2023 ஏப்ரல் 16 ஆந் திகதி ALDTAN பெயரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து குறைந்த கிரயத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான முயற்சிகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் 18 ஆந் திகதியே பதிவுசெய்யப்பட்டிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (சீ) | உடன்படிக்கை செய்யும் போது ரூபா 379,500 செயலாற்றல் பிணை முறியினைப் பெற்றுக்கொள்ளும் போது அக்கம்பனியின் செயற்பாட்டுப் பணிப்பாளர் அல்லாத ஒரு வெளி நபரின் வேண்டுதலின் அடிப்படையில் உரிய கம்பனியின் பெயரில் இறக்குவானை இலங்கை வங்கி கிளையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முற்பணம் செலுத்துவது தொடர்பான ரூபா 1,518,000 முற்பணக் கொடுப்பனவு பிணையும் அந்த இலங்கை வங்கி கிளையினாலேயே 2023 நவம்பர் 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. | இப்பெறுகையினை 2023 திசெம்பர் 31 இல் முடிவுறுத்தும் எதிர்பார்ப்பின் அடிப்படையில் செயலாற்றல் பிணை முறியானது 2024 சனவரி 28 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டது என குறிப்பிடுகிறேன். 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இச்செயற்திட்டத்தில் 80 சதவீதம் அளவானவை முடிவடைந்துள்ளது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்பதனால் மிகுதி 20 சதவீதம் அளவானவை 2024 சனவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றது என எதிர்பார்க்கப்பட்டதனால் 2024 சனவரி 28 ஆந் திகதி வரையான செயலாற்றல் பிணையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான முயற்சிகள் எடுத்தல் வேண்டும் |

### 1.5.4.1 தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை செலவு ரூபா 6,114,080 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா | 2024 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள வகையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 193,105 ஆக அதாவது ரூபா 5,920,975 குறைத்து நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ii) | முதலமைச்சினால் அதிகார சபைக்காக 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 49,854,693 தொகை கணக்கு முறைமைக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் அண்டு வரை முதலமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் கணக்குகளுக்குள் உள்ளடக்கப்படாததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான செலவுகளுக்கு உள்ளடக்கப்பட்டது. | சரியாகவும் முழுமையாகவும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கின் மீதி ரூபா 58,409,230 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 54,807,235 ஆக ரூபா 3,601,995 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடையை கணித்தலானது கணனியின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது கூட்டுதல் தவறு ஏற்பட்டுள்ளது. அதற்கிணங்க ரூபா 3,601,995 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (iv) | ஊழியர் கடனாக வழங்கப்பட்டிருந்த ரூபா 22,217,916 பணத்தை நிதி நிலைமை கூற்றில் காட்டும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பிரகாரம் ஒரு ஆண்டின் போது அறவிடக்கூடிய ரூபா 8,619,147 பணம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து ஊழியர் கடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நீண்டகால சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பிரகாரம் சொத்துக்கள் அடையாளங் காணப்படுதல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டிலிருந்து வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 626,355,000 தொகையான நிலையான ரூபா 34,023,029 வட்டி வருமானம் கிடைத்திருந்ததுடன் அந்த வட்டிக்காக வங்கியினால் கழித்து நேரடியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த 05 சதவீதமான ரூபா 1,790,685 நிறுத்திவைத்தல் வரிப் பெறுமதியானது (WHT) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து மீண்டும் அறவீடு செய்வதற்கு அல்லது அதிகார சபைக்கு வரிக் கடப்பாடு இல்லை என்பதனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விடுவிப்பு சான்றிதழின் அடிப்படையில் நிறுத்திவைத்தல் வரியினை கழிக்க வேண்டாம் என உரிய வங்கிகளிடம் வேண்டுகோள் விடுப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நிறுத்திவைத்தல் வரி சம்பந்தமாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபையினால் செலுத்தப்படுகின்ற நிறுத்திவைத்தல் வரி (WHT) சம்பநதமாக உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் பராமரிக்கப்படுகின்ற காலி பஸ் நிறுத்துமிட வளவில் தொலைக்காட்சி டிஜிடல் திரையினைப் பயன்படுத்தி | இந்த 04 பஸ் நிறுத்துமிடங்களும் அதிகாரசபையின் உரிமையின் கீழேனும் நிருவாக உரிமை காணப்படுகின்ற பஸ் நிறுத்துமிடங்கள் அல்லது | அதிகார சபையினால் பராமரிக்கப்படுகின்ற பஸ் நிறுத்துமிட வளவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வருமான மூலங்களை அடையாளங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்காக அதிகார சபையின் பரஸ்பர நலன்புரிச் சங்கத்தினால் ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு அதிகாரசபைக்கு கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளாது ஒரு ஆண்டு காலத்திற்காக ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டு நலன்புரிச் சங்கத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒரு நாளைக்கு 14 மணித்தியாலத்திற்குள் பிரதான 07 தொகுதிகளின் கீழ் விளம்பரங்கள் செயற்படுத்தப்படுகின்றது எனவும் அவற்றில் ஆகக் குறைந்த விளம்பர கட்டணங்களின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு 8400 வினாடிகளுக்காக விளம்பர கட்டணமாக ரூபா 8,000 அறவிடப்படுகின்றது என்பதுவும் உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க அதிகாரசபைக்கு வருடாந்தம் ஆகக் குறைந்தது ரூபா 17 மில்லியன் அளவான வருமானம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தும் வெளித்தரப்பினர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பராமரிக்கப்படுகின்ற பஸ் நிறுத்துமிடங்கள் அல்லாததனால் பஸ் நிறுத்துமிடங்கள் சம்பந்தமாக அதிகார சபைக்கு அல்லது அங்கத்துவ சபை உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் அதன் கடைகளை குத்தகைக்கு வழங்குதல் அல்லது அதன் கீழ் வருமான மூலங்களுக்காக தொடர்புபடுத்தும் அதிகாரம் காணப்படவில்லை. | அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | GPS தொழில்நுட்பத்தை பஸ் சேவையை முகாமைத்துவம் செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கான | இச்செயற்திட்டத்தின் கீழான நியதிச்சட்டரீதியான குறிக்கோளான சிறந்த பயணிகள் போக்குவரத்து சேவையினை | தாமதிக்கின்ற பயண நேரங்களுக்காக 1996 இன் 02 ஆம் இலக்க தென் மாகாணவீதிப் பயணிகள் |

செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு பயணத் தடவையிலும் ஆகக் குறைந்தது 05 வினாடி வீதம் ஒரு நாளைக்கு 13,000 பயண நேரங்கள் தாமதமடைவதால் ஒரு ஆண்டின் போது தென் மாகாணத்திற்கு 3,250,000 வினாடிகள் இழக்கப்படுகின்றது என காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க அந்த தாமதிக்கின்ற ஒரு பயண நேரத்திற்காக 1996 இன் 02 ஆம் இலக்க தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தொடர்பான நியதிச் சட்டத்தின் பிரகாரம் தண்டப் பணம் அறவிடப்படுமாகவிருந்தால் ஒரு ஆண்டிற்கு ரூபா 949 மில்லியன் ஆகக்குறைந்த தண்டப் பணமாக அறவிடக்கூடியதாக இருந்தும் மீளாய்வாண்டிற்கான தாமத பயண நேரங்களுக்காக ரூபா 80,750 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மேலும் அப்பணம் அறவிடக்கூடியதாக இருந்த பணத்தில் 0.01 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

அனைவருக்கும் நியாயமான வகையில் உருவாக்கி கொடுத்தல் என்ற பிரதான குறிக்கோளின் கீழ் செயற்படுவதனாலும் தேசிய ரீதியாக இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு இலங்கை பாராளுமன்றம் அனைத்து போக்குவரத்து நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளதனால் மேற்கூறிய குறிக்கோளின் கீழ் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

போக்குவரத்து அதிகாரசபை தொடர்பான நியதிச்சட்டத்தின் பிரகாரம் தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### (இ) செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து 15 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் முதலீடு செய்யப்பட்ட நிலையான வைப்புக்கள் காலாவதியாவதற்கு 66 நாட்களுக்கு முன்னர் விடுவித்ததன் காரணமாக ரூபா 1,125,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | உரிய பணம் 11 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பட்டு 25 நாட்களுக்கு முதலீடு செய்யப்படாததானது உரிய தீர்த்துவைத்தல்களை 2022 திசெம்பர் 31 இல் மேற்கொள்வதற்காகவாகும். எனவே உரிய சுயமாக முதிர்ச்சியடையும் வரை அது வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி முகாமைத்துவத்தினை சிறப்பாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

### (ஈ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 சனவரி 03 ஆந் திகதி தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் சேமிப்புக் கணக்கின் மிகைப் பணம் ஒரு ஆண்டிற்கு 7.5 சதவீத வட்டிக்கு 2023 சனவரி 03 ஆந் திகதியில் முதிர்ச்சியடையும் வகையில் ரூபா 59,080,000 நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தென் மாகாண வீதிப் பாயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நிருவாக அபிவிருத்தி நிதிப் பணிப்பாளரின் SPRTA/ACC/F1/01 ஆம் இலக்க 2022 திசெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் முதிர்ச்சியடைவதற்கு 04 நாட்கள் காணப்பட்டிருந்தும் ரூபா 846,398 வட்டி வருமானத்தின் கீழ் விடுவிக்கப்பட்டிருந்தது. | இந்த வட்டி விகிதத்தினை விட அதிக அளவான பணத்தினை பின்னர் முதலீடு செய்து அதிகாரசபை உழைத்திருந்தது. | இது சம்பந்தமாக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4.2 தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த சுழற்சி நிதியத்தின் கடன்பட்டோர் பெறுமதிக்கும் கணக்காய்விற்கு வழங்கிய 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனித்தனி மீதி பதிவேட்டின் பிரகாரமான மீதிக்குமிடையே ரூபா 9,609,289 வித்தியாசம் காணப்பட்டது. | 2017, 2018, 2019, 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் உருவாகியிருந்த வித்தியாசத்தை அடையாளங்கண்டு பொதுப் பேரேட்டில் தேவையான செம்மையாக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுழற்சி நிதியத்தின் கடன்பட்டோர் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ii) | அதிகாரசபையினால் 2021 பருமனளவு அடிப்படை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கொள்கலன் பெட்டியை பயன்படுத்தி ஒரு விற்பனை நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 2,170,250 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதி வரை அச்செலவு மூலதனமாக்கப்படாததனால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,170,250 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அதிகாரசபையினால் 2021 பருமனளவு அடிப்படை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கொள்கலன் பெட்டிகளைப் பயன்படுத்தி விற்பனை நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 2,170,250 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை அச்செலவு மூலதமாக்கப்படவில்லை. அப்பிழையை சரிசெய்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியை ஏடுகளில் உள்ளடக்குவதற்கு 2024 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (iii) | திறைசேரியிடமிருந்து பல்வேறு செயற்திட்டங்களுக்காக கிடைத்துள்ள ரூபா 55,000,000 பணம் செயற்திட்டங்களை அமுல்லபடுத்தாது அதிகார சபையின் வங்கி கணக்குகளில் | 2021 திசெம்பர் 20 ஆந் திகதி அமைச்சு செயலாளரினால் கணக்குகளில் மிகுதியாக உள்ள பணத்தை தனியாக மீள அனுப்பிவைக்குமாறு செய்யப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பொதுக் கணக்கில் (மீண்டுவரும் செலவுகளை | திறைசேரியிடமிருந்து செயற்திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்திவைத்திருந்ததன் காரணமாக திறைசேரிக்கு அனுப்பிவைக்குமாறு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அப்பணத்தில் ரூபா 20,000,000 மாத்திரம் 2021 திசெம்பர் மாதம் திறைசேரிக்கு தீர்த்துவைக்கப்பட்டு இன்னும் ரூபா 35,000,000 பணம் மேலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளும் கணக்கில்) இருந்த பணத்தில் ரூபா 5,000,000 தொகையும் உறுப்பினர்கள் நிதி ஏற்பாட்டுக் கணக்கில் செயற்திட்டத்திற்காக கிடைத்த பணத்தில் மிகுதி ரூபா 15,000,000 தொகையும் கௌரவ தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தில் 2021 திசெம்பர் 23 ஆந் திகதி மீளத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது. எனினும் சுழற்சி நிதியத்தில் கடன் கொடுப்பனவு கணக்கில் வேண்டப்பட்ட ரூபா 30,000,000 பணத்தை அமைச்சிற்கு அனுப்பிவைக்காதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணமாவது கடன் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பயன்படுத்திக்கொள்வதற்காகவாகும். | செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (iv) | 2021 ஆம் ஆண்டில் கொல்கலன் பெட்டிகளைப் பயன்படுத்தி விற்பனை நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,570,250 செலவுகள் தொடர்பான வவுச்சர்கள் காணாமல் போயிருந்தது. | கொள்கலன் பெட்டிகளைப் பயன்படுத்தி விற்பனை நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டமானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் நிறைவேற்றுகின்ற ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டமாகும். அக்கொள்கலன்களின் வவுச்சர்கள் காணாமல் போயுள்ளது என தெரிந்துகொண்ட உடன் அது பற்றி கௌரவ தலைவருக்கும் பணிப்பாளர் நாயகத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டது. அது பற்றிய பரீட்சிப்புக்களை எதிர்காலத்தில் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிதி விதிகளின் பிரகாரம் வவுச்சர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத:ததல் வேண்டும். காணாமல் போன வவுச்சர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள்** | **இணக்கமின்மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தரத்திலுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் நடைமுறையின் 4.1 ஆம் பந்தி | மேற்கூறிய பந்தியின் பிரகாரம் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தரத்திலுள்ள பதவிக்காக ஆட்சேர்க்கும் போது வெளி விண்ணப்பதாரர்களுக்கு இருக்க வேண்டிய தகமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பட்டத்துடன் ஒரு பட்டப் பின்படிப்பு காட்டப்பட்டிருந்தும் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயக பதவியில் தற்பொழுது செயற்படுகின்ற உத்தியோகத்தரால் அத்தகமைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்கு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தற்பொழுது மேற்கூறிய வழக்குகள் 07 தடவைகள் கோரப்பட்டுள்ளதனால் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக சேர்த்துக்கொள்ளுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதி கௌரவ ஆளுநரின் சிபாரிசுகளுக்கு இணங்க இந்த அதிகார சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தற்பொழுது பதில் கடமைபார்க்கும் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையில் சுயதொழில் உதவி வழங்குவது சம்பந்தமாக முறையான வழிகாட்டிக் கோவை | சுயதொழில் உதவி வழங்குவதன் கீழ் 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் மாகாண | முறையான வழிகாட்டிக் கோவை நிறுவனத்தினால் தயாரிக்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மாகாண சபை உறுப்பினர்களால் வழங்கப்படுகின்ற பெயர்ப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு சுயதொழில் உதவி வழங்கப்பட்டிருந்தது. 2020,2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் தென் மாகாண சபை செயற்படாத நிலையில் உறுப்பினர் நிதி ஏற்பாடானது உறுப்பினர்களின் பெயர்களின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கடந்த மாகாண சபை பிரதிநிதித்துவப்படுத்திய 13 மாகாண சபை உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலுக்கு இணங்க ரூபா 2,945,583 சுயதொழில் உதவியாக 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. | சபை உறுப்பினர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் நலன்பெறுனர்களின் இயலுமை மற்றும் ஈடுபாட்டின் அடிப்படையில் சுயதொழில் உதவி வழங்கப்பட்டது. | வேண்டும். |

**(ஈ) தீர்த்துவைக்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் 25 இலட்சம் தென்னை நாற்றுக்களை வழங்குவது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு நேரடியாக ஏற்பட்டுள்ள ரூபா 18,034,507 நட்டத்தை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தென்னை நாற்றுக்கள் சம்பந்தமான நட்டத்தை அறவீடு செய்வதற்காக காலி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது. இன்று வரை 19 தடவைகள் வழக்கு விசாரிக்கப்பட்டுள்ளன. | திர்த்துவைக்கப்படாத கணக்காய்வு பந்திகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4.3 ருகுணு சுற்றுலா பணியகம்

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 72 ஆம் பந்தியின் பிரகாரம் காணிக்காக பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யாதிருத்தல் வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் ரூபா 48,609,644 பெறுமதியான காணிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,430,482 பெறுமானத் தேய்வு செய்ய்பட்டிருந்தது. | ருகுணு சுற்றுலாப் பணியகத்தினால் கணக்குகளைத் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு காணி கட்டிடங்களுக்காக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் பின்னர் காணிக்காக பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்படமாட்டாது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | காணி கட்டிடங்களின் ஆரம்ப மீதியானது முன்னைய ஆண்டின் இறுதியின் இயலளவு பெறுமதியான ரூபா 185,403,610 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 182,293,461 ஆக காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 3,110,149 ஆல் நிலையான சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் இறுதியில் தேறிய இயலளவு பெறுமதி ரூபா 185,403,610 சரியான பெறுமதி அல்லாததுடன் எனினும் 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த தகவல்களே குறிப்புக்களில் காட்டப்பட வேண்டும் என்பதனால் அத்தகவல்கள் காட்டப்பட்டுள்ளன. எனினும் 2023 ஆரம்ப மீதியாக சரியான ஆரம்ப மீதி பெற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு இல்லையாயின் 2023 ஆம் ஆண்டு பெறுமதியை சரியாகப் பெற்றுக்கொள்ள முடியாது போகும் என்பதனாலாகும். அதற்கிணங்க ரூபா 182,293,461 பெறுமதி சரியான பெறுமதி எனவும் ரூபா 3,110,149 ஆல் நிலையான சொத்துக்கள் குறைத்துக் காட்டுதல் இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கிறேன். | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | காணி கட்டிடங்களுக்காக ஆண்டின் சேர்த்தல்கள் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 8,775,631 ஆக இருந்த போதிலும் கணக்கீட்டு குறிப்பு 16 இன் பிரகாரம் ரூபா 12,916,612 ஆக காட்டியிருந்ததன் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,140,981 அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ஆண்டின் சேர்த்தல்கள் ரூபா 8,775,631 ஆக இருந்த போதிலும் பேரேட்டில் திரண்ட நிதியத்திலிருந்தான செம்மையாக்கல் ரூபா 4,140,981 அளவானதாகும். அது தயாரிக்கப்பட்டுள்ளதானது 2022 ஆம் ஆண்டில் மீள் மதிப்புச் செய்யப்பட்டுக் கணக்குகளுக்கு கொண்டுவரப்படாத அகுரல காணி ரூபா 3,000,000 மற்றும் 2021 ஆம் ஆண்டில் காணிகளின் மொத்த தொகையை பெற்றுக்கொள்ளும் போது குறைத்து பதியப்பட்ட ரூபா 270,509.96 மற்றும் மதுனாகல மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்ட எனினும் 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்படாத ரூபா 4,062,175.08 மற்றும் வெந்நீர் ஊற்றுக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள Changing room இற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 188,880 பணமாகும். அதற்கிணங்க காணி மற்றும் கட்டிடங்களில் மிகையாக பதிவுசெய்தல் இடம்பெறவில்லை. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(ஆ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாதாரர்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக ருகுணு சுற்றுலா பணியகத்தினால் | நகரத்திற்கு அருகாமையில் காணப்படுவதனால் தொடர்ச்சியாக குப்பைகள் தூசிகள் நிரம்பி காணப்படுவதுடன் பணியகத்தின் | சொத்துக்களின் பாதுகாப்பிற்காக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஏனைய |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,350,000 செலவு செய்து 2022 ஆம் ஆண்டின் போது ஹிக்கடுவ வெலிகம, தங்கல்ல ஆகிய நகரங்களில் சுயமாக செயற்படும் 03 KIOSK இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தும் அந்த 03 KIOSK இயந்திரங்களும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையும் எந்த சுற்றுலாதாரர்களினாலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் அதன் காரணமாக அந்த இயந்திரங்கள் மற்றும் கூடாரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவாகிய ரூபா 2,488,954 தொகை முழுவதும் ஒரு விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | வேலையாட்களால் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை துப்பரவு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன் கதவின் கைபிடி செயற்படாதிருந்தமை சம்பந்தமாக கூடாரத்தை தயாரித்தலினை மேற்கொண்ட நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. அந்த நிறுவனத்தினூடாக உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருந்ததானது கண்ணாடிக்கு பாதிப்புக்கள ஏற்படுவதனைத் தவிர்த்து உரிய செயற்பாட்டினை பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும் என்பதனாலாகும். | ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ii) | 2023 யூன் 30 ஆந் திகதியில் ஹிக்கடுவ அபிமங்சல கட்டிடத்தை குத்தகைக்கு பெற்ற நிறுவனத்திடமிருந்து ருகுணு சுற்றுலா பணியகத்தினால் ரூபா 5,703,750 பணம் அறவிட வேண்டி இருந்தது. அவ்வாறே கட்டிடத்திற்காக ரூபா 47,722,156 செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு மற்றும் சுற்றுலா துறையின் மேம்பாட்டிற்கு பங்களிப்பினை வழங்குவதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் ஹிக்கடுவ பிரதேச செய்லகத்திற்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டது. இதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவீடு செய்ய வேண்டியுள்ள நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் உரிய சொத்தை வினைத்திறனான நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 305 - தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | நிதி விதி 46.1 | தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 27 செலவு விடயங்களுக்காக நிதி ஏற்பாட்டு பணத்த மிகைத்து ரூபா 476,540,487 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் நி.பி 46.1 இற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கும் அவ்வாறான நிலைமையை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதி விதி 54 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 58 வாகன விபத்துக்கள் தொடர்பாக ரூபா 38,685,020 தொகையான நட்டம் சம்பந்தமாக இன்னும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு இருந்ததுடன் அதனுள் 05 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 28,202,395 தொகையான 43 சம்பவங்களும் 05-10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 5,729,426 தொகையான 14 சம்பவங்களும் 10 | காட்டப்பட்டுள்ள வாகன விபத்துக்களுக்கு மத்தியில் 18 விபத்துக்களை தீர்த்துவைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2024-05-15 ஆந் திகதியளவில் இன்னும் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 40 ஆகும். எனவே எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 753,200 தொகையான ஒரு சம்பவமும் காணப்பட்டது. இது சம்பந்தமாக நடாத்தப்படுகின்ற பரீட்சிப்பு செயற்பாடு துரிதமாக முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | நிதிவிதி 259.2 மற்றும் தென் மாகாண பிரதம செயலாளரின் 2024 சனவரி 02 ஆந் திகதிய 03/2023 ஆம் இலக்க பிரதம செயலாளரின் (கணக்குகள் மற்றும் கொடுப்பனவுகள்) சுற்றறிக்கை | தொடர்புபட்ட விதிகளின் பிரகாரம் ஆண்டின் இறுதியின் போது கணக்குகள் தீர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மிகுதியாக உள்ள கட்டுநிதி மீதி அடுத்துவரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதி அல்லது மாகாண திறைசேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற திகதிக்கு முன்னர் மாகாண தீறைசேரிக்கு மீளச் செலுத்த வேண்டிய போதிலும் தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ரூபா 111,851,705 தொகையான கட்டுநிதி மீதி சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த மீதியில் 2020 இலிருந்து 2022 வரை 03 ஆண்டுகளை | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மிகைத்து சுகாதார அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,755,322 மீதியும் உள்ளடக்கப்பட்டுள்ள துடன் அப்பணம் சம்பந்தமான எழுத்துமூல உறுதிப்படுத்தல் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை. | |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2015 மே 21 ஆந் திகதி இமதுவ மாவட்ட வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக விபத்து ஏற்பட்டு ஒரு ஆண்டின் பின்னர் காப்புறுதி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியதனால் காப்புறுதி இழப்பீடு கிடைத்திருக்கவில்லை. 2016 திசெம்பர் 14 ஆந் திகதிய மூன்று நபர் குழு அறிக்கையின் பிரகாரம் திருத்தம் செய்வது வினைத்திறன் அற்றது என்பதனால் உடைந்த பொருளாக கைதவிர்ப்புச் செய்வதற்காக 2017 சனவரி 10 ஆந் திகதி வாகனம் சுகாதார அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக 2015 நவம்பர் 23 ஆந் திகதி நியமிக்கப்பட்ட தொடக்க புலனாய்வுக் குழுவின் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை புலனாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் நட்டம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அம்புலன்ஸ் வாகனம் 2015 மே 21 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியமை சம்பந்தமான கோவைகளைப் பரீட்சித்த போது தொடர்புபட்ட தொடக்க புலனாய்வு அறிக்கைக்கும் நிதிப்பிரமாணத்தின் படியான அறிக்கைக்குமிடையே வித்தியாசம் அவதானிக்கப்பட்டதனால் இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் முதலமைச்சு செயலாளருடன் ஒரு கலந்துரையாடலினைப் பெற்றுத் தருமாறு 2024 மார்ச் 13 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் புலனாய்வு அறிக்கையின் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**(இ) செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | அம்பாந்தோட்டை உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவின் மூலம் 2019 இலிருந்து 2023 வரையான காலத்தில் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு விலை மனுக்கள் கோரி வழங்கப்பட்ட ரூபா 28,380,000 மொத்த பெறுமதியான 84 மருத்துவ உபகரணங்களின் திருத்தம் செய்யும் நடவடிக்கையானது கணக்காய்வுத் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் மூலம் விசாரிக்கப்பட்டிருந்தும் பதில் கிடைக்காமையால் ஞாபகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. | உரிய இரண்டு கம்பனிகளின் மூலம் திருத்தம் செய்தல்கள் தொடர்பான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | திருத்தம் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பதிவேட்டின் பிரகாரம் 301 நிறுவனங்களிடமிருந்து 2017 இலிருந்து 2023 வரை காலி மாத்தறை, அம்பாந்தோட்டை உயிரியல் மருத்துவ பொறியியல் அலுவலகத்திற்கு திருத்தம் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்ட முறையே 1,178 112 மற்றும் 252 ஆக மொத்ததமாக 1,726 மருத்துவ உபகரணங்களை திருத்தம் செய்வதற்குரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | இதுவரை திருத்தம் செய்யப்படாத அனைத்து மருத்துவ உபகரணங்களுக்குமுரிய பின்தொடர் நடவடிக்கைகளானது தற்பொழுது எங்கள் நிறுவனத்தினால் தங்காலை ஆதார வைத்தியசாலை மற்றும் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினையும் உரிய உள்நாட்டு முகவர் நிறுவனத்தினையும் தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்பட்டது. | திருத்தம் செய்யும் செயற்பாட்டினை துரிதமாக பூர்த்திசெய்தல் வேண்டும். |

### (ஈ) சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2008 ஆகஸ்ட் 28 ஆந் திகதி ஓடுவதற்கு பொருத்தமற்றதனால் தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் இருந்த மிட்சுபிசி ஜீப் வாகனம் மற்றும் டொயோடா லேண்ட் குரூசர் வாகனம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை தனிப்பட்ட பெயர்களில் வருமான அனுமதிப் பத்தரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந் தது. | இது சம்பந்தமாக மேலும் விடயங்களை ஆராய்ந்து பார்த்து கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். | சம்பவம் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ii) | தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட 02 வாகனங்கள் நிறுவனத்தின் மூலம் வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதன் கீழ் காட்டப்பட்டாதிருந்த போதிலும் அந்த இரண்டு வாகனங்களும் முறையே 2018 ஆம் ஆண்டின் போது தனிப்பட்டவர்களின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்ததுட ன் 2023 ஆம் ஆண்டு வரை வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந் தது. | இது சம்பந்தமாக மேலும் விடயங்களை ஆராய்ந்து பார்த்து கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். | சம்பவம் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

**(உ) வெளிப்படையான ஒழுங்கீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | அம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 03 அம்புலன்ஸ் வாகனங்களின் இன்ஜின் இலக்கம் வித்தியாசமாக இருந்தமை சம்பந்தமாக 2023 நவம்பர் 16 ஆந் திகதி ஒரு புலனாய்வுக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையும் பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புலனாய்வுக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக புலனாய்வின் சிபாரிசுகளை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | 2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட மருத்துவ வழங்கல் தகவல் முகாமைத்துவ முறைமையின் (MSMIS) மூலம் காலாவதியான மருந்துகளை ஒரு ஆண்டிற்குள் அடையாளங்கண்டு கைதவிர்ப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுத்து நிதிப் பிரமாணம் 102 இலிருந்து 109 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக சுகாதார அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென 2021 திசெம்பர் 08 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுகாதார அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையில் காட்டப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே குழு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 23.6 மில்லியனுக்கு அண்மித்த காலாவதியான மருந்துகள் PRONTO முறைமையின் மூலம் | இது சம்பந்தமாக சுகாதார அமைச்சிடமிருந்து 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை. | முறைமையின் மூலம் மருந்துகளை அகற்றுவது சம்பந்தமான தொடக்க புலனாய்வின் சிபாரிசுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையான அங்கீகாரமின்றி பொருள் மீளாய்விற்காக வழங்கப்பட்டிருந்த கடவுச் சொற்களை பயன்படுத்தி அழிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | உடுகம ஆதார வைத்தியசாலையின் 03 அம்புலன்ஸ் வண்டிகள் தொடர்பாக போலி ஓட்ட அட்டவணைகளைத் தயாரித்தல், அங்கீகாரமின்றி அம்புலன்ஸ வண்டிகளை ஓட்டுதல், எரிபொருள் சமப்படுத்தலினை மோசடியாக மேற்கொள்ளல், மோசடியாக பயண நேரங்களை பதிவுசெய்தல் என்பவற்றினூடாக அரசாங்கத்திற்கு மோசடி செய்து 793 லீற்றர் டீசல்களினதும் 369 லீற்றர் சுப்பர் டீசல்களினதும் பெறுமதியான ரூபா 457,009 பணம் சம்பந்தமாக வழங்கப்பட்டிருந்த தொடக்க புலனாய்வு அறிக்கையின் சிபாரிசுகள் மற்றும் தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் பட்டோலையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கும் உரிய சம்வங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடக்க புலனாய்வு அறிக்கை முதலமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள துடன் அந்த சிபாரிசுகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்தல் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதனை துரிதப்படுத்தல் வேண்டும். |

**(ஊ) சிக்கமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (i) | கும்புறுபிடிய ஆதாரவைத்தியசாலைக்கு மத்திய வாயு சீராக்கி முறைமையை ஸ்தாபிப்பதற்காக ரூபா | முதலமைச்சின் மூலம் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் அறிக்கையிடப்படும். | அரசாங்கத்திற்கு ஏற்பட்டு நட்டம் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | 14,416,500 வரியற்ற பெறுமதிக்கு 2015 செப்தெம்பர் 28 ஆந் தகிதி ஒரு தனியார் கம்பனியுடன் முதலமைச்சு உடன்படிக்கை செய்திருந்ததுடன் 2015 திசெம்பர் 28 ஆந் திகதியளவில் வேலைகள் முடிவுறுத்த வேண்டிய இருந்தது. எவ்வாறாயினும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அல்லது பின்னர் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு முறைப்படியாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 15 ஆந் திகதி வரை உரிய கம்பனிக்கு மொத்தமாக ரூபா 13,727,482 பணம் பிழையை சரிசெய்வதற்காகவும் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்காகவும் மற்றும் சேவை செய்வதற்காகவும் ஏனைய நிறுவனங்களுக்கு ரூபா 938,940 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தும் மத்திய வாயு சீராக்கி முறைமை பொருத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து செயற்படும் நிலையில் காணப்படவில்லை. மேலும் இச்செயற்திட்டத்திற்காக மதிப்பீடு தயாரிப்பதிலிருந்து செயற்திட்டத்தை முடிவுறுத்தும் வரை பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நபர்களை அடையாளங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பலபிடிய ஆதாரவைத்தியசாலைக்கான மத்திய வாயு சீராக்கி முறைமையானது ரூபா 7,678,179 செலவு செய்து 2016 யூன் 20 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் அத்திகதியிருந்தே குறைபாடுகளுடனான நிலைமையில் காணப்பட்டதுடன் அது 2017 திசெம்பர் 03 ஆந் | முதலமைச்சின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் சிபாரிசின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை அறிவிக்கப்படும். | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதியளவில் முழுமையாக செயற்பாடற்றுக் காணப்பட்டது. அதற்கிணங்க இரண்டு வைத்தியசாலைகளிலும் சத்திரசிகிகிச்சைகளை நடாத்துவதற்காக ரூபா 4,365,980 பணம் செலவு செய்து 22 Split AC இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை இச்செயற்திட்டம் வெற்றியளிக்காமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**(எ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மித்தெனிய பிராந்திய வைத்தியசாலையில் தெளித்தல் இயந்திரத்தை இயக்குபவர் 2018 ஏப்ரல் 07 ஆந் திகதியிலிருந்து தெரியப்படுத்தாது சேவைக்கு சமூகமளிக்காததன் அடிப்படையில் 2023 பெப்ரவரி 13 ஆந் திகதி பதவியை வரிதாக்க்குதல் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2018 எப்ரல் 24 ஆந் திகதியிருந்து 2022 செப்தெம்பர் மாதம் வரை சேவையை கைவிட்டுச் சென்ற பின்னரும் ரூபா 2,131,001 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | தொடக்க புலனாய்வின் சிபாரிசின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்திற்கு எற்பட்ட நட்டத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஏ) வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | அங்குனுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனம் 2017 ஒக்தோபர் 14 அந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பான திருத்தம் செய்தல் செலவான ரூபா 1,438,168 பணத்தை சாரதியிடமிருந்து அறவீடு செய்ய வேண்டும் என சிபாரிசு வழங்கப்பட்டிருந்தும் 2019 சனவரி 19 ஆந் திகதி சாரதி மரணமடைந்துள்ளதனால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விதியின் பிரகாரம் செயற்பட்டு சாரதியிடமிருந்து உரிய நட்டத்தை அறவீடு செய்யும் வாய்ப்பு உத்தியோகத்தரின் தாமதத்தின் காரணமாக இல்லாமல் போய்விட்டது. | 2023 நவம்பர் 25 ஆந் திகதி நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | வாகன விபத்துக்கள் சம்பந்தமாக உரிய காலத்தில் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | தொடர்புபட்ட சுற்றறிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லைகள் மற்றும் எரிபொருள் வகை தொடர்பாக மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந் | எரிபொருள் படியினை செலுத்தும் போது உத்தியோகத்தர் தொகுதி வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருள் படிகளில் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தி | தும் மற்றும் அது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சிபாரிசுகளை கருத்தில் கொள்ளாதும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தேசிய கொள்கை சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறியும் ஆளுநரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆந் திகதிய கடித்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம செயலாளர் சுற்றறிக்கை (நிதி) வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க தென் மாகாண திட்டமிடல் செயலகத்தின் 02 பதவிகளைச் சேர்ந்த 02 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,293,465 அங்கீகரித்த எல்லை மிகைத்திருந்ததன் காரணமாகவும் சுப்பர் பெற்றோல்/ சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் | செலுத்தப்படாததுடன் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக அந்த வாகனங்களுக்கு பயன்படுத்துகின்ற எரிபொருள் வகைகளுக்கு இணங்க இரண்டு வகைகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உண்மையான எரிபொருள் வகையை அடிப்படையாகக் கொண்டு படிகள் செலுத்தப்பட்டுள்ளன. |

காரணமாகவும் ரூபா 560,830 எரிபொருள் படியாக மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

**1.5.22 தலைப்பு 322 - தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகம்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லைகள் மற்றும் எரிபொருள் வகை தொடர்பாக மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தும் மற்றும் அது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சிபாரிசுகளை கருத்தில் கொள்ளாதும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தேசிய கொள்கை சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறியும் ஆளுநரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆந் திகதிய கடித்தின் மூலம் வழங்கப்பட்ட | எரிபொருள் படியினை செலுத்தும் போது உத்தியோகத்தர் தொகுதி வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருள் படிகளில் செலுத்தப்படாததுடன் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக அந்த வாகனங்களுக்கு பயன்படுத்துகின்ற எரிபொருள் வகைகளுக்கு இணங்க இரண்டு வகைகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உண்மையான எரிபொருள் வகையை அடிப்படையாகக் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம செயலாளர் சுற்றறிக்கை (நிதி) வழங்கப்பட்டிருந்தது டன் அதற்கிணங்க தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தின் 03 பதவிகளைச் சேர்ந்த 03 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,290,175 அங்கீகரித்த எல்லை மிகைத்திருந்ததன் காரணமாகவும் சுப்பர் பெற்றோல்/ சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் காரணமாகவும் ரூபா 178,560 எரிபொருள் படியாக மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | கொண்டு படிகள் செலுத்தப்பட்டுள்ளன. |

**1.5.23 தலைப்பு 323 - தென் மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- |
| 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லைகள் மற்றும் எரிபொருள் வகை தொடர்பாக மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தும் மற்றும் அது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சிபாரிசுகளை கருத்தில் கொள்ளாதும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தேசிய கொள்கை சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறியும் ஆளுநரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம செயலாளர் சுற்றறிக்கை (நிதி) வழங்கப்பட்டிருந்தது | எரிபொருள் படியினை செலுத்தும் போது உத்தியோகத்தர் தொகுதி வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருள் படிகளில் செலுத்தப்படாததுடன் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக அந்த வாகனங்களுக்கு பயன்படுத்துகின்ற எரிபொருள் வகைகளுக்கு இணங்க இரண்டு வகைகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உண்மையான எரிபொருள் வகையை அடிப்படையாகக் கொண்டு படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

டன் அதற்கிணங்க தென் மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் ஒரு பதவியினைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தருக்கு 2019 மே மாதத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 83,300 அங்கீகரித்த எல்லை மிகைத்திருந்ததன் காரணமாகவும் சுப்பர் பெற்றோல்/ சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் காரணமாகவும் ரூபா 29,025 எரிபொருள் படியாக மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

**1.5.24 தலைப்பு 324 - தென் மாகாண வருமானத் திணைக்களம்**

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆந் திகதிய 13/2008 (V) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக | தொடர்புபட்ட சுற்றறிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லைகள் மற்றும் எரிபொருள் வகை தொடர்பாக மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்து | எரிபொருள் படியினை செலுத்தும் போது உத்தியோகத்தர் தொகுதி வகைப்படுத்தப்பட்டு இரண்டு அடிப்படைகளின் கீழ் எரிபொருள் படிகளில் செலுத்தப்படாததுடன் உத்தியொகத்தர்கள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தி | ம் மற்றும் அது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சிபாரிசுகளை கருத்தில் கொள்ளாதும் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தேசிய கொள்கை சம்பந்தமான சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறியும் ஆளுநரின் 2019 மே 13 ஆந் திகதிய G/SP/1/6/1/19 ஆந் திகதிய கடித்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 மே 16 ஆந் திகதிய 02-2019 ஆம் இலக்க பிரதம செயலாளர் சுற்றறிக்கை (நிதி) வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க தென் மாகாண மாகாண வருமான திணைக்களத்தின் ஒரு பதவியினைச் சேர்ந்த 02 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதத்திலிருந்து 2023 யூன் மாதம் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 295,908 அங்கீகரித்த எல்லை மிகைத்திருந்ததன் காரணமாகவும் சுப்பர் பெற்றோல்/ சுப்பர் டீசல் பயன்படுத்தியதன் காரணமாகவும் ரூபா 237,668 எரிபொருள் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக அந்த வாகனங்களுக்கு பயன்படுத்துகின்ற எரிபொருள் வகைகளுக்கு இணங்க இரண்டு வகைகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க பயன்படுத்துகின்ற உண்மையான எரிபொருள் வகையை அடிப்படையாகக் கொண்டு படிகள் செலுத்தப்பட்டுள்ளன. |

## (ஆ) செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மாகாண நிதி விதி 116.1 இன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது தொடர்பாக வருமானங்களை சேகரிக்கும் உத்தியோகத்தர் கவனத்தோடும் மிகுந்த அக்கறையோடும் இருக்க வேண்டியதுடன் சட்ட வாயிலாகவோ அல்லது ஏனைய வழிகளின் மூலமோ நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைஎடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 04 வருமான குறியீடுகள் தொடர்பாக அறவீடு செய்வதற்கு உள்ள ஒட்டுமொத்த நிலுவைப் பணம் ரூபா 375.6 மில்லியனாக இருந்ததுடன் அப்பணத்தினுள் 03 ஆண்டுகளை மிகைத்த ரூபா 203.96 மில்லியன் நிலுவை வலுருமானமாகும். | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்காக 1990 இன் 07 ஆம் இலக்க தென் மாகாண நிதி நியதிச் சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஏனைய வருமான நடைமுறைகள் எடுத்தல் இடம்பெற்று வருகின்றது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவிட முடியாத வருமானங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii)** | **உறுதியின் இரண்டாவது பிரதிக்காக நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் பணத்தை அறவீடு செய்தல்** | | |
| | தென் மாகாண சபையின் 1990 இன் 07 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் பிரகாரம் நொத்தாரிசுகள் எழுதி சான்றுபடுத்துகின்ற உறுதிகளின் இரண்டாவது பிரதிக்காக நிர்ணயிக்கப்பட்ட முதிதிரைக் கட்டணத்தினை செலுத்தாதிருக்கையில் நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் அறவீடு செய்தல் வேண்டும். எனினும் மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்திடமிருந்து 2021 ஆகஸ்டிலிருந்து 2022 ஏப்ரல் வரையான 08 மாதங்கள் தொடர்பாக ரூபா 9,560,841,078 தொகையான 2784 உறுதிகளின் தகவல்கள் 2023 பெப்ரவரி மாதம் | 2021 ஆகஸ்டிலிருந்து 2022 ஏப்ரல் வரையான 08 மாதங்கள் தொடர்பாக 2784 உறுதிகளின் தகவல்கள் 2023-02-24 ஆந் திகதி கிடைத்துள்ளது எனவும் 2024 மார்ச் 31 ஆந் திகதியளவில் அவற்றில் 1023 பிரதிசெய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். | மாகாண சபைக்கு வருமானங்களை சேகரிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

24 ஆந் திகதி மாகாண வருமான பிராந்திய அலுவலகத்திற்கு கிடைத்திருந்தும் 2023 நவம்பர் 27 ஆந் திகதி வரை அது சம்பந்தமான கோவைகள் திறக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கோவைகள் திறக்காமையால் முத்திரை கட்டண செயற்பாடுகளை கைவிடுதல்

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2018 மே மாதத்திலிருந்து 2020 ஆகஸ்ட் மாதம் வரையான 19 மாதங்கள் தொடர்பாக ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடனான 7481 உறுதிகள் சம்பந்தமான பட்டோலைகள் மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2020 யூலை 30 ஆந் திகதி மற்றும் 2021 ஏப்ரல் 07 மற்றும் செப்தெம்பர் 23 ஆந் திகதிகளில் மாகாண வருமான அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த உறுதிகளில் 2023 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 நவம்பர் 24 ஆந் திகதி வரை 2327 உறுதிகளுக்காக கோவைகள் திறக்கப்பட்டிருந்ததுடன் 5154 உறுதிகள் சம்பந்தமாக உரிய உறுதிகள் எந்த வகையிலான உறுதிகள் என்பதனை அடையாளங்கண்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய உறுதிகளுக்காக கோவைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு மதிப்பீட்டாளருக்கும் காணப்படுகின்ற ஏனைய கடமைகளையும் உள்ளடக்கி ஒரு ஆண்டிற்குள் முகாமைத்துவம் செய்யப்படக்கூடிய உச்ச அளவாக 500 கோவைகளுக்கு அண்மித்த அளவு மாத்திரமாகும். அதற்கிணங்க ஒட்டுமொத்த திணைக்களத்திற்காகவும் திறக்க கூடிய உச்ச அளவு கோவைகளின் எண்ணிக்கையை 9,950 ஆகும். அவை திணைக்களத்தினால் 100 சதவீதம் உச்ச அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலைமையில் நடைமுறைச் சாத்தியமான அடிப்படையில் கிடைக்கின்ற உறுதிகள் தெரிவு செய்தலினை மேற்கொண்டு கோவைகள் திறக்கப்படுகின்றன. | மாகாண சபைக்கு வருமானங்களை சேகரிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (பீ) | மேலும் 2018 ஆம் ஆண்டின் மே, யூலை, ஆகஸ்ட் செப்தெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடனான 1934 உறுதிகள் தொடர்பான விபரத்தை உள்ளடக்கிய பட்டோலையை அடிப்படையாகக் கொண்டு 2023 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 நவம்பர் 29 ஆந் திகதி வரை முத்திரை கட்டண செயற்பாட்டிற்காக 579 கோவைகள் திறக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த மாதங்களுக்குரிய பட்டோலைகளைப் பரீட்சித்த போது ரூபா 2,289,318,710 பெறுமதியான 1355 உறுதிகள் சம்பந்தமாக உரிய உறுதிகள் எந்த வகையான உறுதிகள் என்பதனை அடையாளங்கண்டு கோவைகள் திறக்கப்படாமையால் முத்திரைக் கட்டண செயற்பாடு கைவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (சீ) | தங்காலை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் முத்திரைக் கட்டண பட்டோலையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் போது பதிவுசெய்யப்பட்ட முழு உறுதிகளின் எண்ணிக்கை 5938 ஆக இருந்ததுடன் அந்த உறுதிகளின் பெறுமதி ரூபா | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் காணிப் பதிவாளர் அலுவலகம் மாதாந்தம் பட்டோலையை அனுப்புதலினை மேற்கொண்டிருக்காததுடன் இது சம்பந்தமாக காணிப் பதிவாளர் அடிக்கடி தெரியபட்படுத்தியுள்ளார். | மாகாண சபைக்கான வருமானத்தை சேகரிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 5,091,239,200 ஆகும். அவற்றில் ரூபா 500,000 மற்றும் அதற்கு மேற்பட்ட பெறுமதியினைக் கொண்ட உறுதிகளின் எண்ணிக்கை 2360 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 3,456,952,100 ஆகும். எனினும் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடனான உறுதிகளுக்கு மத்தியில் முத்திரைக் கட்டண செயற்பாட்டிற்காக மாகாண வருமான அலுவலகத்தினால் 232 உறுதிகளுக்காக மாத்திரம் கோவைகள் திறக்கப்பட்டிருந்தன. | ஹம்பாந்தோட்டை அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் காணிப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று உறுதிகளின் விபரத்தை பதிவு செய்து வருகையின் அடிப்படையில் இதுவரை கோவைகள் திறக்கப்பட்டுள்ளது என 2023 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகரித்த மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கையை (03) பூரணப்படுத்தியதன் காரணமாக ஒரு ஆண்டிற்கு 1500 கோவைகள் வீதம் திறக்கப்பட்டது எனவும் அதன் போது பெறுமதிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்குவதற்கு வசதிகள் கிடைக்காமையின் காரணமாக தங்காலை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட உறுதிகளின் எண்ணிக்கையில் மிகவும் குறைந்த அளவானவற்றிற்காக மாத்திரம் கோவைகள் திறக்கப்பட்டுள்ளன. | |
| (iv) | வெளி மாகாணங்களிலுள்ள நொத்தாரிசுகளினால் மாத்தறை மாவட்டத்தில் காணிகளை பரிமாற்றம் செய்வது தொடர்பாக உறுதியை பதிவுசெய்யும் முத்திரை கட்டண செயற்பாடு கைவிடப்படல் | | |
| | தென் மாகாணத்தை தவிர்த்து ஏனைய மாகாணங்களின் நெத்தாரிசுகளினால் மாத்தறை மாவட்டத்தில் காணிகளை பரிமாற்றம் செய்வது தொடர்பான | ஏனைய 16 உறுதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக உரிய உறுதிகளின் பிரதிகளை வழங்குமாறு பிரதி | மாகாண சபைக்கான வருமானங்களை சேகரிப்பதற்காக தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிகளை பதிவுசெய்தல் சம்பந்தமாக கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 27 ஆந் திகதி மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 54,897,017 பெறுமதியான காணிகளை பரிமாற்றம் செய்யும் 18 சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் 16 உறுதிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டு கோவைகள் திறக்கப்பட்டு உரிய முத்திரைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டவாறு செலுத்தப்பட்டுள்ளனவா என்பதன பரீட்சித்து நிலுவையான முத்திரை கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | ஆணையாளரினால் மாத்தறை காணிப் பதிவாளருக்கு 2024 சனவரி 18 ஆந் திகதி எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்தின் காணிகள் மற்றும் மாவட்ட பதிவாளரினால் வெளி மாகாண நொத்தாரிசுகளினால் சான்றுபடுத்திய உறுதிகளின் இரண்டாம் பிரதி மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டு 2024 சனவரி 23 ஆந் திகதி எழுத்துமூலம் மாத்தறை பிரதி ஆணைாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க அந்த நொத்தாரிசுகளின் அதிகாரப் பிரதேசங்களிலுள்ள காணி அலுவலகத்திற்கு அந்த ஒவ்வொரு ஆதனம் தொடர்பான உறுதிகளின் இரண்டாம் பிரதியை வழங்குமாறு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அந்தகவல்கள் கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | ஆதனங்களின் ஒப்படைப்பு அடிப்படையில் சான்றிதழ் வழங்குதல் | | |
| | ஒரு தனியார் நிறுவனத்தின் ஆதனத்தை இன்னுமொரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் போது நிலையான ஆதனமாக ரூபா 104,000,000 தொகையான தேயிலை தொழிற்சாலை (கட்டிடங்கள் | விண்ணப்பதாரரினால் அபிப்பிராய விண்ணப்ப பத்திரம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைபு உறுதியின் மூலம் ஒப்படைக்கப்படுகின்ற ஆதனமாக | 1990 இன் 07 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மற்றும் பயிர்களுடனான காணியை உள்ளடக்கி) மற்றும் அசையும் ஆதனமாக ரூபா 232,000,000 தொகையான இயந்திரங்களும் பொருத்திகளும் ரூபா 16,000,000 தொகையான வாகனங்கள் மற்றும் ரூபா 12,000,000 தொகையான வியாபார இலாபங்களுமாக வகைப்படுத்தப்பட்டு வரைபு உடன்படிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு அப்பிப்பிராய சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்ப பத்திரம் 2023 சனவரி 09 ஆந் திகதி மாகாண வருமான திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதற்கிணங்க அபிப்பிராய கூற்றினை வழங்குவதற்காக மாகாண வருமான ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் 2023 சனவரி 31 ஆந் திகதி வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அனைத்து அதனங்களின் பெறுமதி ரூபா 243,000,000 தொகையும் செலுத்த வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 9,719,000 தொகையுமாகக் காட்டி அப்பிப்பிராய சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தும் அதற்கு இணங்கி கொள்ளாததன் அடிப்படையின் விண்ணப்பதாரரினால் 2023 பெப்ரவரி 09 ஆந் திகதி மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மேன்முறையீட்டு விசாரணை நடாத்தப்பட்டிருந்தும் அதற்கான இணக்கப்பாடு வெளியடப்பட்டிருக்காததனால் மேற்கூறிய நியதிச் சட்டத்தின் 79(11) ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்த வேண்டிய முத்திரை கட்டணத்தை 07 நாட்களுக்குள் பூரணப்படுத்துவதற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. விண்ணப்பதாரரினால் அதற்கு பட்டோலையில் காட்டப்பட்டுள்ளவாறு தேயிலை தொழிற்சாலை, ஏனைய கட்டிடங்கள், மரங்களும் பெருந்தோட்டமும் மற்றும் அவை தொடர்புபட்ட ஏனைய அனைத்துதமாக காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க எங்களால் அபிப்பிராய சான்றிதழினை வழங்கும் போது அப்பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் சம்பந்தமாக கவனித்துப் பார்க்கப்படுவதுடன் எங்களால் அபிப்பிராய சான்றிதழினை வழங்குவதானது விண்ணப்ப பத்திரத்துடன் சமரப்பிக்கப்பட்ட வரைபின் பட்டோலையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களுக்காகவேயாகும். எனினும் விற்பனை செய்தல் மற்றும் கொள்வனவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட வரைபு உறுதியின் உடன்படிக்கையிலுள்ள பட்டோலையில் குறிப்பிட்ட ஆதனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அவ்வாறு செலுத்தப்படாத ரூபா 9,719,000 தொகையான முத்திரைக் கட்டணம் நிதி நியதிச்சட்டத்தின் பிரகாரம் செலுத்த தவறியுள்ள முத்திரைக் கட்டணமாக அவதானிக்கப்பட்டது.

**1.5.25 தலைப்பு 325 - தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| நிதி விதி 259.2 மற்றும் தென் மாகாண பிரதம செயலாளரின் 2024 சனவரி 02 ஆந் திகதிய 03/2023 ஆம் இலக்க பிரதம செயலாளர் (கணக்ககள் மற்றும் கொடுப்பனவுகள்) சுற்றிக்கை | தொடர்புபட்ட சட்டவிதிகளின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் கணக்குகள் திர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் திசெம்பர் மாத்தின் 31 ஆந் திகதியளவில் மிகுதியாக உள்ள கட்டுநிதி மீதியானது அடுத்துவரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதிக்கு அல்லது மாகாண திறைசேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற திகதிக்கு முன்னர் மாகாண திறைசேரிக்கு மீளச் செலுத்த வேண்டிய போதிலும் தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ரூபா 688,000 தொகையான கட்டுநிதி மீதி சம்பந்தமாக அவ்வாறு | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 850,674,421 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 777,611,692 ஆகும்.

## 3. நியதிச்சட்ட கணக்குகள்/ நிதிய கணக்ககள்/ வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்

### 3.1 நியதிச்சட்ட கணக்குகள்/ நிதிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தென் மாகாண சபையில் நியதிச்சட்டரீதியான நிறுவனங்களுக்காக வழங்கப்படுகின்ற நிதி எற்பாடானது அந்த நிறுவனங்களின் குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான 02 நிறுவனங்களுக்காக வழங்கிய ரூபா 482,238,726 தொகையான நிதி மேற்கூறிய குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்படாது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணம் நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

### 3.2 ஏனைய முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்ககளின் மொத்த மீதி ரூபா 1,577,211,969 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த மீதிகளில் இடமாற்றம் பெற்றுச் சென்ற/ ஓய்வுபெற்ற, மரணமடைந்த, வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற 3,609 | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிட வேண்டிய கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து இன்னும் அறவிட வேண்டிய ரூபா 53,726,173 மொத்த தொகையான கடன் மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தங்காலை ஆதார வைத்தியசாலைகளிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் அறவிட வேண்டிய கடன் மீதிக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் படியான மீதிக்குமிடையே ரூபா 565,633 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் இந்த வித்தியாசமானது 10 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து காணப்பட்டிருந்தும் வித்தியாசத்திற்கான காரணத்தை சரியாக அடையாளங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் தனித்தனி மீதிகளின் பொழிப்புக்குமிடைடேயயான வித்தியாசத்திற்கான காரணத்தை எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 அரசாங்க மானியம்

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் (பீஎஸ்டீஜீ) மாகாண அபிவிருத்தி மானியம் (பீடீஜீ), பருமனளவு அடிப்படையிலான மானியம் (சீஈஜீ) மற்றும் ஏனைய அபிவிருத்தி செயற்திட்ட மானியங்களைப் பயன்படுத்துவது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| நிதி மூலம் | அங்கீகரித்த தொகை | செலவு செய்த தொகை | குறைந்த பயன்பாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் (PSDG) | 825,200,000 | 802,412,669 | 22,787,331 |
| பருமனளவு அடிப்படையிலான மானியம் (CBG) | 152,000,000 | 152,000,000 | - |
| ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம் (PSSP) | 1,444,000,000 | 1,390,795,671 | 53,204,329 |
| சாதாரண கல்வியை நவீனமயப்படுத்துதல் செயற்திட்டம் (GEMP) | 375,000,000 | 365,733,588 | 9,266,412 |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மேலேயுள்ள தகவல்களின் பிரகாரம் தென் மாகாண அபிவிருத்தி திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் 04 நிதி மூலங்களின் மூலம் கிடைத்த நிதி ஏற்பாட்டில் செலவு செய்ததன் பின்னர் இன்னும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம், ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம், சாதாரண கல்வியை நவீனமயப்படுத்துதல் செயற்திட்டம் என்பவற்றிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திலிருந்து முறையே ரூபா 22.8 மில்லியன் ரூபா 53.2 மில்லியன் மற்றும் 9.3 மில்லியன் குறைவாக பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிதி ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டின் பேரில் ரூபா 1,620 மில்லியன் (PSDG) மற்றும் ரூபா 104 மில்லியன் (CBG) தொகையான அபிவிருத்தி திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன. எனினும் நிதி ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்திற்காக நிதி ஆணைக்குழு செயலாளரின் FC/PDP/03/2023-SP ஆம் இலக்க 2023 மார்ச் 03 ஆந் திகதிய கடித்தின் மூலம் இணக்கப்பாட்டினை வழங்கும் போது செயற்திட்டம் சம்பந்தமான கடப்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய கொடுப்பனவுக்குத் தேவைப்படுகின்ற கட்டுநிதியை பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கட்டுநிதி உறுதிப்பாட்டினைப் | திட்டமிட்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எற்பாட்டிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெற்றுக்கொண்டு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல் இடம்பெற்றுள்ளதுடன் ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் காணப்பட்ட அதிக மழைவீழ்ச்சியுடனான வானிலையின் காரணமாக திட்டமிட்டவாறு செயற்திட்டத்தீனை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 4.1.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைகள், மற்றும் தொடர்ச்சியான வேலைகளுக்காக ரூபா 857.53 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கான 699 பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலைப் பிரேரணைகளின் செயல்முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| **விபரம்** | | **புதிய வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை** | **தொடர்ச்சியான வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை** | **முழு வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை** | **முழு வேலைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா. மில்லியன்** |
|---|---|---|---|---|---|
| (i) | பூரணமாக பூர்த்திசெய்யப்பட்டவை | 622 | 07 | 629 | 625.99 |
| (ii) | 50 சதவீத்தீனை விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்டவை | 21 | - | 21 | 50.33 |
| (iii) | 50 சதவீத்தினை விட மிகையாக பூர்த்தி செய்யப்பட்டவை | 40 | - | 40 | 179.21 |
| (iv) | ஆரம்பிக்கப்படாதவை | 09 | - | 09 | 2.0 |
| | மொத்தம் | 692 | 07 | 699 | 857.53 |

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாகாண குறித்தொதுக்கிய மற்றும் பருமளவு அடிப்படையான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அங்கீகரித்த 699 வேலைப் பிரேரணைகளின் செயல்முன்னேற்றத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 629 வேலைப் பிரேரணைகளின் வேலைகள் பூரணமாக முடிவடைந்துள்ளதுடன் 61 வேலைப் பிரேரணைகள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் 09 வேலைப் பிரேரணைகளை ஆரம்பிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க இன்னும் 61 வேலைப் பிரேரணைகள் அமைச்சு மட்டத்தில் முடிவுறுத்த வேண்டிக் காணப்படுவதனால் அந்த அந்த அமைச்சின் மூலம் மேற்கூறிய வேலைப் பிரேரணைகளை முடிவுறுத்துவது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கையானது முறைப்படியாக இடம்பெற்றிருக்கவில்லை. | செயற்திட்டம் சம்பந்தமான கடப்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய கொடுப்பனவுகளுக்காக தேவைப்படுகின்ற கட்டுநிதியை பொதுத்திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்வது தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அறிவுறுத்தலினை வழங்குதல் மற்றும் மேற்கூறிய விடயங்களின் காரணமாகவும் ஆண்டின் இறுதி அரைப் பகுதியில் காணப்பட்ட அதிக மழையுடனான கால நிலையின் காரணமாகவும் திட்டமிட்டவாறு செயற்திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தும் வேலைகள் முடிவுறுத்தப்படாத 61 செயற்திட்டங்களுக்கு மத்தியில் 2024 ஆம் ஆண்டில் தொடர்ச்சியான செயற்திட்டங்களாக 07 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்படுவதுடன் ஏனைய செயற்திட்டங்கள் அந்த காணப்பட்ட நிலைமையினை முடிவுறுத்தியுள்ளது. | பின்தொடர் நடவடிக்கையினை முறைப்படியாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | மாகாண அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கும் அடிப்படைக் குறிக்கோளானது மாகாணத்தினுள் முன்னுரிமை வழங்க வேண்டிய அத்தியவசியமான செயற்திட்டங்களை (விசேடமாக | ஆண்டின் ஆரம்பத்தின் போது வருடாந்த அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை பல சந்தர்ப்பங்களில் திருத்தம் | செயற்திட்டத்தினை சரியாக அடையாளங் கண்டு அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண வருமானத்தினை அதிகரிப்பதற்குரிய செயற்திட்டம்) அடையாளங்கண்டு அதற்கிணங்க முன்னுரிமைத் தேவைப்பாட்டினை ஆவணப்படுத்தி உரிய அபிவிருத்தி செயற்திட்டங்களை உள்ளடக்கி மாகாண அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதாக இருந்த போதிலும் ஆண்டின் போது மாகாண அபிவிருத்தி திட்டத்திலுள்ளதான அபிவிருத்தி செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாகாண சபையில் காலரீதியாக அடையாளங்காணப்படுகின்ற விசேட செயற்திட்டங்களை திருத்தம் செய்யும் போது சில காலப்பகுதியினைத் திர்மானித்தலின் மூலம் தேவையற்ற வகையில் செயற்திட்டங்களை திருத்தம் செய்வதனை தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்தும் ஆண்டின் இறுதியின் போது அதிக செலவு செய்து தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்தின் மூலம் உரிய குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செய்ய வேண்டி ஏற்பட்டதனால் தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டில் 14 செயற்திட்டங்களுக்காக அங்கீகரித்த கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்கு மிகையாக ரூபா 3.91 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | எங்களால் கையிலுள்ள விலைப்பட்டியல்களை அங்கீகரிக்கும் போது முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட விலைப்பட்டியல்களின் பெறுமதியை கழித்து செலுத்த வேண்டியுள்ள கையிலுள்ள விலைப்பட்டியலின் பெறுமதி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும் கையிலுள்ள விலைப் பட்டியல்களின் பெறுமதியை மிகைத்து வீதி அபிவிருத்தி அதிகார | விலைப்பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது சான்றுபடுத்துதல், அங்கீகரித்தல், கொடுப்பனவு செய்தல் என்பன நிதிப்பிரமாணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சபையினால் விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்தலானது எங்களின் சிபாரிசோ அல்லது அங்கீகாரமோ இல்லாது மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாகும். இது சம்பந்தமாக பல சந்தர்ப்பங்களில் அந்த அதிகாரசபைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. | |
| (ஈ) | அவ்வாறே 2023 ஆம் ஆண்டிற்கான 08 செயற்திட்டங்களுக்காக கையிலுள்ள விலை பட்டியல்களுக்கு ரூபா 1.12 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மேற்கூறிய கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யப்படாமையின் அடிப்படையில் சரியான மதிப்பீட்டின் மீது உரிய செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படவில்லை எனவும் பிழையாக கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலமே கையிலுள்ள விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதுடன் இது சம்பந்தமாக நாங்கள் ஆராய்ந்து பார்த்த போது அவதானிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பல சந்தர்ப்பங்களிலும் உரிய அமைச்சினூடாக அந்த அதிகார சபையிடம் விசாரிக்கப்பட்டுள்ளது விசாரணைக்காக பதில் வழங்கப்படாமை மற்றும் காரணத்தை சமர்ப்பிக்காது இச்செயற்திட்டத்தினை அங்கீகரிக்குமாறு எங்களுக்கு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் அச்செயற்திட்டத்திற்காக எங்களால் அங்கீகாரம் வழங்காமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. | பின்தொடர் நடவடிக்கையினை முறைப்படியாக மேற்கொள்ள வேண்டியதுடன் உரிய செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பரீட்சிப்பிற்கு உட்படுத்துதல் வேண்டும். |

## 4.2 ஆளணி நிருவாகம்

### 4.2.1 மாகாண சபை நிறுவனங்களின் ஆளணியினர்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள் (கல்வி மற்றும் சுகாதாரத்தை தவிர்த்து) தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | அமையம்/ பதிலீடு/ ஒப்பந்தம் | |
| (i) | மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் | 5,684 | 5,271 | 16 | 413 |
| (ii) | உள்ளூராட்சி நிறுவனங்கள் | 5,961 | 5,340 | 601 | 621 |
| (iii) | நியதிச் சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்கள் | 593 | 447 | 11 | 146 |
| | | ................ | .......... | .................. | ............. |
| | மொத்தம் | 12,238 | 11,058 | 628 | 1,180 |
| | | ................ | .............. | ........... | ............... |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை நிறுவனங்களின் ஆளணியினர் தகவல்களின் பிரகாரம் மாகாண சபை உத்தியோகத்தர்களில் 1,180 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க சேவையின் பொதுக் கொள்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2.2 பாடசாலை ஆளணியினர்

தென் மாகாண பாடசாலைகளில் காணப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆளணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஊழியர் வகை | | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகையான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 283 | 141 | 142 | - |
| (ii) | பிரதி அதிபர்கள்/ உதவி அதிபர்கள் | 1,337 | 914 | 423 | - |
| (iii) | ஆசிரியர்கள் | 23,592 | 21,280 | 2,312 | - |
| (iv | சிற்றூழியர்கள் மற்றும் உதவி ஆளணியினர் | 3,322 | 4,045 | - | 723 |
| | | ................ | .......... | .................. | ............. |
| | | 28,534 | 26,380 | 2,877 | 723 |
| | | ................ | .............. | ........... | ............... |

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/SP/0301 ஆம் இலக்க 2019 எப்ரல் 02 ஆந் திகதி கடித்தின் மூலமும் DMS/SP/0301 ஆம் இலக்க 2019 மே 28 ஆந் திகதிய கடிதத்தின் மூலமும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை செயற்பாட்டு உதவியாளர் மற்றும் பாடசாலை காவலாளர்களின் எண்ணிக்கையை மிகைத்து 53 பாடசாலையை செயற்பாட்டு உதவியாளர் பதவிகளுக்கும் 670 காவலாளர் பதவிகளுக்குமாக மொத்தமாக ரூபா 343,135,800 தொகை மிகையாக சம்பளமும் கூலிகளும் செலுத்துவதற்குரிய அங்கீகாரத்தை வழங்கிய ஆளணியினர் கடிதம் இருக்கவில்லை. | பாடசாலை ஆளணியாக வழங்கியுள்ள படிவத்தில் குறிப்பிட்ட அங்கீகரித்த எண்ணிக்கையானது 2019 ஆளணி மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் சரியானது அல்ல என்பதனால் அந்த புள்ளிவிபரம் பின்வருமாறு சரி செய்யப்பட வேண்டும்.<br><br>2019 ஆளணி மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் தென் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளுக்கான அதிபர்களின் எண்ணிக்கை 1337 ஆகும். (அதிபர்கள், பிரதி அதிபர்கள் உதவி அதிபர்கள்) | பர்டசாலைகளில் காணப்படுகின்ற அளணி பற்றாக்குறை/ மிகைகள் சம்பந்தமாக பொருத்தமான நடைமுறை பின்னபற்றப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 2019 ஆளணி மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் தென் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளுக்காக அங்கீகரித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 23,596 ஆகும். | |
| | 2019 ஆளணி மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் தென் மாகாணத்தின் சிற்றூழியர்கள் மற்றும் உதவி ஆளணியினருக்கான அங்கீகரித்த எண்ணிக்கை 4,132 ஆகும். | |

### 4.2.3 சுகாதார ஆளணியினர்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் அங்கீகரித்த ஆளணியினர் மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான ஆளணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஊழியர் வகை** | **அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை** |
|---|---:|---:|---:|
| சிரேஷ்ட மட்டம் | 1,395 | 1,156 | 239 |
| மூன்றாம் மட்டம் | 169 | 109 | 60 |
| இரண்டாம் மட்டம் | 5,288 | 4,830 | 458 |
| ஆரம்ப மட்டம் | 3,255 | 2,858 | 397 |
| | ............... | .......... | ........... |
| | 10,107 | 8,953 | 1,154 |
| | ............... | .......... | .......... |

| **அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ஒவ்வொரு சேவைத் தரத்திலும் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையைவிட 1,154 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதற்கிணங்க எல்பிடிய, கப்புறுபிடிய , தங்கல்ல ஆகிய ஆதார வைத்திய சாலைகளில் சில உத்தியோகத்தர்கள் | தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின்மூலம் பேணப்படுகின்ற தரவு முறைமையில் தகவல்களை உள்ளடக்குதலானது | அங்கீகரித்த அளணியினருக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் லேவண்டும். |

06 ஆண்டுகளிலிருந்து 35 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர் என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிறுவனத்தில் பேணப்படுகின்ற தகவல் முறைமையில் 05 ஆண்டுகளை மிகைத்த அனைத்து உத்தியோகத்தர்கள் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

தனிப்பட்ட கோவைகளை பேணுகின்ற மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களின் மற்றும் ஆதாரவைத்தியசாலைக ளின் தனிப்பட்ட கோவைகளுக்குப் பொறுப்பான விடய உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க இத்தரவு முறைமைக்கு தரவுகளை உள்ளடக்குதல் மற்றும் நாளதுவரையாக்குதல் சம்பந்தமாக அவ்வப்போது அந்த நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே கடந்த நாட்களில் ஒவ்வொரு நிறுவனதத்தையும் தனித்தனியாக எடுத்து அந்த நிறுவனங்களின் தகவல்களை உள்ளடக்குவது சம்பந்தமாக உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க எதிர்காலத்தில் அனைத்து உத்தியோகத்தர்களின் தகவல்களையும் தரவு முறைமைக்குள் உள்ளடக்குவதற்கும் தரவு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு ம் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தென் மாகாணத்தில் செயற்படுகின்ற பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களில் அச்சங்கங்களுக்கு தனித்தனியாக தொடர்புபடும் வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உப நியதிச் சட்டங்களின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு ஒரு தடவை பிராந்திய குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு பிராந்திய குழுவின் உத்தியோகபூர்வ காலம் 03 ஆண்டுகளாகும். அக்காலம் முடிவடைந்ததன் பின்னர் ஒரு தேர்தலினை நடாத்தி புதிய உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் 297/7 ஆம் இலக்க 1977 திசெம்பர் 28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் தென் மாகாணத்தில் செயற்படுகின்ற 34 பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களில் 20 சங்கங்களின் உத்தியோகபூர்வ காலம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவடைந்திருந்தது. ஒரு சங்கத்தில் வழக்கு நடவடிக்கை காணப்பட்டிருந்தும் ஏனைய 19 சங்கங்களில் தேர்தல்களை நடாத்துவதற்கு உரிய வர்த்தமானி பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தென் மாகாணத்திலுள்ள பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் பலவற்றின் உத்தியோகபூர்வ காலம் 2022 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்தும் பிராந்திய குழு/ பணிப்பாளர் சபையை தெரிவுசெய்வதற்கான தேர்தல்களானது அது சம்பந்தமாக கௌரவ ஆளுநரினால் G/SP/04/0402/03-1 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 27 ஆந் திகதிய கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடாத்தப்படவில்லை. | உரிய வர்த்தமானி அறிவுறுத்தலின் மூலம் பெற்ற அதிகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 26 செலவுத் தலைப்புக்ளுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் மொத்தமாக ரூபா 4,770,164,561 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதிகளானது ரூபா 1,383,824 இற்கும் ரூபா 1,571,938,944 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கலின் காரணமாக 01/2023 ஆம் இலக்க பிரதம செயலாளரின் சுற்றறிக்கை மற்றும் 03/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் செலவுகளை குறைக்குமாறு தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க செலவுகளை மேற்கொள்ளும் போது அத்தியவசியமான செலவுகளுக்கும் மூலதனச் செலவுகளுக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததன் காரணத்தினாலாகும். | தேவைப்பாட்டிற்குப் போதியதான நிதி ஏற்பாடு வழங்கப்படுதல் வேண்டும். |